# வருடாந்த அறிக்கை-2013

## விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம்
## பேராதனைப் பல்கலைக்கழகம



# உள்ளடக்கங்கள்


| | பக்கம் (கள்) |
|---|---|
| நிறுவகத்தின் தூரநோக்கும் பணியும் | i |
| நிறுவகத்தின் நிறுவனக் கட்டமைப்பு | ii |
| முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் | iii |
| 1. 2013.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பணிப்பாளர் மீளாய்வு | 01 |
| 1.1 அறிமுகம் | 01 |
| 1.2 கல்விசார், ஆராய்ச்சி செயற்பாடுகள் | 01 |
| 1.3 வருடாந்த காங்கிரஸ் | 02 |
| 1.4 அடைவுகள் | 02 |
| 1.5 தோல்விகளும் நியாயாதிக்கங்களும் | 02 |
| 1.6 எதிர்காலத் திட்டங்களும் | 03 |
| 2. வளங்கள், மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 03 |
| 3. வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 05 |
| 4. 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கல்விசார் அலுவலர்கள் பற்றிய விபரங்கள் (நிரந்தரம் மாத்திரம்) | 05 |
| 5. 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கல்விசாரா அலுவலர்கள் பற்றிய விபரங்கள்(நிரந்தரம் மாத்திரம்) | 06 |
| 5.1 ஆட்சேர்ப்பு | 06 |
| 5.2 வி.ப.பி.நி. அலுவலர்கள் பங்குபற்றிய பயிற்சியும் செயலமர்வுகளும் | 06 |
| 6. ஆராய்ச்சி,புத்தாக்கங்கள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள்- 2013 | 08 |
| 7. அ நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள்,செயலமர்வுகள்- 2013 | 08 |
| ஆ வருடாந்த காங்கிரஸ் | 09 |
| 8. அ 2013 இல் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள்,செயலமர்வுகள், பயிற்சி/ விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், செயலமர்வுகளும் குறுங் கற்கைநெறிகளும் | 11 |
| 8. ஆ நிறுவகம் அனுசரணை வழங்கிய சர்வதேச மாநாடுகள், செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்- 2013 | 12 |
| 9. இவ்வாண்டு அலுவலர்கள், மாணவர்கள் ஆகிய இருவரும் பெற்றுக்கொண்ட விருதுகள் பற்றிய விபரங்கள்- 2013 | 13 |
| 10. 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கைகள் பற்றிய விபரங்கள் | 13 |
| 11. பொது நிருவாகம் | 13 |
| 11.1 பழைய கட்டிடத்தைப் புதுப்பித்தல் | 13 |
| 11.2 வி.ப.பி.நி.இல் உள்ள முகாமைத்துவ தகவல் முறைமை | 14 |
| 11.3 நலன்புரியும் உல்லாசமும் | 15 |
| 11.4 வி.ப.ப.நி.இன் வருடாந்த சுற்றுலா | 16 |

| | |
|---|---|
| 12. விவசாய நூலகத்தின் வருடாந்த அறிக்கை | 18 |
| 13. நிறுவகத்தின் நிதிச் செயலாற்றுகை – 2013 | 21 |
| 13.1 மீண்டுவரும் செலவு பற்றிய விபரங்கள் | 21 |
| 13.2 மூலதனச் செலவு பற்றிய விபரங்கள் | 22 |
| 13.3 சட்ட ரீதியான அறிக்கையும் வெளிப்பாடும் | 23 |
| 14. கணக்காய்வுக் குழு அறிக்கை | 41 |

## தூரநோக்கு

நாட்டின், தொழிற்றுறையின், பிரபஞ்ச சமூகத்தின் தேவைகளை நிறைவேற்ற விவசாயம் மற்றும் அதனுடனிணைந்த துறைகளிலான பட்டப்பின்படிப்புக் கல்வி, ஆராய்ச்சியிலே பிராந்தியத்தின் உன்னத நிலையமாக விளங்குதல்

## பணி

பட்டப்பின்படிப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமாக சேவையாற்றுதல், உயர் தர கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியினூடாக கல்வி ரீதியாகப் பூரணத்துவம்வாய்ந்த, செயன்முறை நோக்காகக் கொண்ட பயிற்சியினை வழங்குதல், விவசாயம் மற்றும் அதனுடனிணைந்த துறைகளுக்கு சாதகமான பங்களிப்பைச் செய்யக்கூடிய தகுதிவாய்ந்த, புத்தாக்க, அர்ப்பணிப்புள்ள தொழில்சார் நிபுணர்களை உருவாக்குதல்

## இலக்குகள்

1. உன்னத கல்விசார் நியமங்களை அடைந்துகொள்ள முயற்சித்தல்
2. பட்டப்பின்படிப்பு கற்பித்தல், ஆராய்ச்சியில் உன்னத நிலையமாக தேசிய, சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருத்தல்
3. ஆராய்ச்சி, புத்தாக்க கலாசாரம் ஒன்றை நிறுவுதல்
4. நிதி ரீதியாக சாத்தியமான நிறுவகமாக மாறுதல்

## நிறுவன ரீதியான கட்டமைப்பு

இலங்கை அரசாங்கம்

உயர் கல்வி அமைச்சு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

பேராதனைப் பல்கலைக்கழகம்
பேரவை

மூதவை

துணை வேந்தர்

வி.ப.பி.நி. முகாமைத்துவ சபை

பணிப்பாளர் | கற்கைச் சபைகள்

- பிரதிப் பதிவாளர்
- சிரேஷ்ட உதவிப் பொருளாளர்
- செயலகம்

## முகாமைத்துவ சபை 2013

1. பேராசிரியர் பி.சீ.என். பீரிஸ், பணிப்பாளர், விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகம்
2. திரு. டக்ளஸ் நாணயக்கார,மேலதிக செயலாளர், செயலாளரின் பிரதிநிதி, உயர் கல்வி அமைச்சு
3. கலாநிதி அமர சதரசிங்ஹ, பணிப்பாளர் நாயகம், குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம், செயலாளரின் பிரதிநிதி, நிதி அமைச்சு
4. மேலதிக செயலாளர், விவசாய அமைச்சு
5. கலாநிதி கே.எம்.ரீ. கேந்தரகம,செயலாளர் (கால்நடை வளர்ப்பு) செயலாளரின் பிரதிநிதி, கால்நடை, அபிவிருத்தி அமைச்சு
6. திரு.ஆர்.எம். பிரேமதாஸ,பதில் பணிப்பாளர் (அபிவிருத்தி) செயலாளரின் பிரதிநிதி, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
7. திரு.கே.ஏ.ஐ.டி.சில்வா,பணிப்பாளர் (கொள்கை, திட்டமிடல்), செயலாளரின் பிரதிநிதி,சுற்றாடல் அமைச்சு
8. திரு. அனுர சதுரசிங்ஹ,வன பாதுகாப்பதிகாரி (ஆராய்ச்சி, கல்வி), வன வள திணைக்களத் தலைவரின் பிரதிநிதி
9. கலாநிதி ஜயந்த சமரசிங்ஹ,தலைவர், விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை
10. கலாநிதி ரொஹான் விஜேகோன்,விவசாயப் பணிப்பாளர் நாயகம்
11. கலாநிதி குமார த சில்வா,பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்
12. திரு. டபிள்யு.டி.எல். குணரட்ன,பணிப்பாளர்,ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
13. கலாநிதி எச்.ஏ.ஜே. குணதிலக,பணிப்பாளர், தென்னை ஆராய்ச்சி நிறுவகம்
14. பேராசிரியர் கே. சமரசிங்ஹ,பீடாதிபதி, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
15. கலாநிதி ஏ.டி. அம்பிட்டியவத்த,பீடாதிபதி, விவசாய பீடம், சப்ரகமுவ பல்கலைக்கழகம்
16. பேராசிரியர் டி.பீ.ரீ.எஸ்.ஜி. அத்தநாயக்க,பீடாதிபதி, விவசாய பீடம், வயம்ப பல்கலைக்கழகம்
17. கலாநிதி எம்.ஜி.ரீ.எஸ். அமரசேகர,பீடாதிபதி, விவசாய பீடம், ரஜரட்ட பல்கலைக்கழகம்
18. கலாநிதி .பி.சிவராஜா,பீடாதிபதி, விவசாய பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்
19. கலாநிதி எச். ˙சிவசனீரனீ,பீடாதிபதி, விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
20. பேராசிரியர் எச்.பி.எஸ். ஆரியரத்ன,பீடாதிபதி, மிருக வைத்திய கால்நடை விஞ்ஞான பீடம்,பேராதனைப் பல்கலைக்கழகம்
21. பேராசிரியர் வீ.ஏ. சமரசிங்ஹ,விவசாய உயிரியல் கற்கை சபை
22. பேராசிரியை (திருமதி) எச்எல்.ஜே. வீரஹேவா,விவசாய பொருளியல் கற்கை சபை
23. பேராசிரியர் ஈ.ஆர்.என். குணவர்தன,விவசாய பொறியியல் கற்கை சபை
24. கலாநிதி எச்.வீ.ஏ. விக்ரமசூரிய,விவசாய விரிவாக்கல் கற்கை சபை
25. பேராசிரியர் எச்.டபிள்யு. சிறில்,விலங்கு விஞ்ஞான கற்கை சபை
26. கலாநிதி பி.எல்.பீரிஸ். உயிரியல் புள்ளிவிபர கற்கை சபை
27. கலாநிதி சர்மலா குமார்,வர்த்தக நிருவாக கற்கை சபை
28. கலாநிதி எச்.எம்.ஜி.எஸ்.பி. ஹிட்டிநாயக்க,பயிர் விஞ்ஞான கற்கை சபை
29. பேராசிரியர் டி.ஜி.என்.ஜி. விஜேசிங்ஹ,உணவு விஞ்ஞான, தொழில்நுட்ப கற்கை சபை
30. பேராசிரியை (திருமதி) டி. அஹங்கம,தாவரப் பாதுகாப்பு கற்கை சபை
31. பேராசிரியை (திருமதி) எஸ்.பீ. இந்திரரத்ன,மண்ணியல் கற்கை சபை
32. பேராசிரியர் பி.எஸ்.பி. கருணாரட்ன,ப.மா.ஆ. பெயர் குறிக்கப்பட்டவர்
33. பேராசிரியர் ஆர்.பீ. த சில்வா,ப.மா.ஆ. பெயர் குறிக்கப்பட்டவர்
34. கலாநிதி எஸ்.எஸ்.ஈ. றணவன,ப.மா.ஆ. பெயர் குறிக்கப்பட்டவர்
35. கலாநிதி டி.பி.ரீ. விஜேரத்ன,ப.மா.ஆ. பெயர் குறிக்கப்பட்டவர்
36. பேராசிரியர் எஸ்.கே. பின்னவல,ப.மா.ஆ. பெயர் குறிக்கப்பட்டவர்
37. பேராசிரியர் எஸ்.சுபசிங்ஹ,பீடாதிபதி, விவசாய பீடம், றுஹுணு பல்கலைக்கழகம்

# 1. 2013 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளரின் கூற்று/மீளாய்வு – விவசாய பட்டப்பின்படிப்புநிறுவகம் (பணிப்பாளர், பேராசிரியர் பி.சீ.என்.பீரிஸ் அவர்களால் அறிக்கையிடப்பட்டவாறு)

## 1.1 அறிமுகம்

விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகமானது (வி.ப.பி.நி) பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து 1979 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்ட இல. 9 இன் பிரகாரம் 1975 ஜூன் மாதம் பட்டப்பின்படிப்புக் கல்வியின் முன்னோடி நிறுவனமாக தாபிக்கப்பட்டது. பல்வேறு விவசாயத் துறைசார் கல்வியியலாளர்கள், விவசாய, கால்நடை, சுற்றாடலும் வனமும், பெருந் தோட்டம், உயர் கல்வி, விலங்கு உற்பத்தியும் சுகாதாரமும் போன்ற அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் ஆளுமையாளர்கள் ஆகியோர்களைக் கொண்ட முகாமைத்துவ சபையிடம் இந்நிறுவனத்தின் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பட்டப்பின்படிப்புக் கல்விக்கான நாட்டிலுள்ள ஆற்றலை விருத்தி செய்தல், நாட்டின் விவசாயத் துறையினை துரிதமாக விரிவுபடுத்தப் பொருத்தமான முறையில் பயிற்றுவிக்கப்பட்ட விஞ்ஞான ஆளணியினரை வழங்குதல் ஆகியனவே நாட்டைக் கட்டியெழுப்ப எழுச்சியைக் கொடுத்த பிரதான நோக்கங்களாகும். எதிர்பார்க்கப்பட்டவாறு, கால்நூற்றாண்டு காலமாக தேசிய தேவைகளை நிறைவேற்றியுள்ளதோடு சூழல் மாசடைவு, உணவுக் காப்பீடும் பாதுகாப்பும், உயிரியல் பல்வகைத்தன்மை போன்ற இன்னோரன்னவைகள் காரணமாக மேலெழுந்துள்ள நாட்டின் விவசாயத் துறையில் காணப்படும் புதிய சவால்களை எதிர்கொள்ளத் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றது.

## 1.2 கல்விசார் ஆராய்ச்சி செயற்பாடுகள்:

பீடம், நிறுவகம் ஆகிய இரண்டிலேயும் காணப்படும் கலை,ஆய்வுகூட வசதி, தகவல் தொழில்நுட்பம், நூலகம், விரிவுரை அரங்க வசதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வளமான மற்றும் அனுபவம் வாய்ந்த கல்விசாரா பணிக்குழுவின் ஆதரவுடன் பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் நன்கு தகுதி வாய்ந்த கல்விசார் அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழக முறைமை, ஏனைய அரச, தனியார்த் துறை அமைப்புக்களைச் சேர்ந்த சொற்ப அளவிலான கல்விசார் அலுவலர்கள் ஆகியோர் நிறுவகத்தில் கற்பித்தலை பெரும்பாலும் மேற்கொண்டு வருகின்றனர். பரந்துபட்ட விவசாய தலைப்புகளின் தொடரினை பிரதிபலிக்கும் 11 கற்கை சபைகளினூடாக 300 இற்கும் மேற்பட்ட இடைவருகை விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன. 02 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்கள் உட்படவும் வர்த்தக நிர்வாகம், தத்துவ முதுமானி, கலாநிதி, வர்த்தக நிருவாகக் கலாநிதிப் பட்டங்கள் உள்ளிட்ட 26 முதுமானிப்பட்ட நிகழ்ச்சிகள் என நிறுவகம் தற்போது 31 பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வருகின்றது. வருடாந்த மாணவர் உள்ளீர்ப்பு 400- 450 ஆகவும் பலநாடுகளிலிருந்து வருகை தந்த வருடாந்த மொத்த மாணவர் தொகை 2000 ஆகவும் காணப்படுகின்றது. "வழமையை விட அதிகம் திறந்துள்ளது" என்ற பேராதனை பல்கலைக்கழகத்தின் உண்மையான சுலோகத்தைக்கருத்திற் கொண்டு மாணவர் தொகை பெரும்பாலும் பல்கலைக்கழக முறையிலுள்ள அனைத்துப் பீடங்களினதும் பட்டதாரிகளையும் கொண்டுள்ளது. மீளாய்வு ஆண்டின் போது 431 மாணவர்கள் 11 கற்கை சபைகளிலும் பதிவு செய்யப்பட்டனர். விபரங்கள் பின்வருமாறு:

- 328 - 11 கற்கை சபைகளினால் வழங்கப்பட்ட 23 வெவ்வேறு விஞ்ஞான முதுமானி பட்ட நிகழ்ச்சிகள்
- 45 - பி.எஸ்/வர்த்தக நிருவாகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தக நிருவாக முதுமானி பட்டங்கள்
- 31, 04 - முறையே தத்துவ முதுமானி, கலாநிதி

272 மாணவர்கள் தங்களது பட்ட நிகழ்ச்சிகளை பூர்த்தி செய்துள்ளனர்; அதன் விபரங்கள் பால் ரீதியாக கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன:

- எம்.எஸ்.சீ 100/104, எம்.பி.ஏ - 29/07, எம்.பில் - 7/15, பீ.எச்.டி – 03/03 (ஆ/பெ)

வி.ப.பி.நி. ஆனது குறிப்பாக நாட்டின் தேசிய தேவைகளையும் தேவைப்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு தனது கல்விசார் மற்றும் ஆராய்ச்சி அடிப்படையினை உறுதிப்படுத்த கடுமையாக முயற்சித்தும் முனைப்புடன் ஈடுபட்டும் வருகின்றது. மீளாய்வு ஆண்டின் போது இவ்வுன்னத அர்ப்பணத்தை நிறைவேற்றுவதற்காக, ஆலாசனை நடைமுறை மற்றும் அனைத்து பங்குதாரர்களின் சுறுசுறுப்பான பங்குபற்றல் என்பவற்றினூடாக அனைத்து கற்கை சபைகளினதும் முழு பாடத்திட்டமும் மீளாய்வு செய்யப்பட்டது. இதனால் புதியதோர் விவரண அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன் மாணவர் கைநூல் அச்சிடப்பட்டு 2013/14 கல்வியாண்டுக்காக நிறுவகத்திற்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. இதன் விளைவாக வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் தன்மையை அதிகரித்தல், பட்டதாரி பணிக்குழுவின்

தரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தற்போதுள்ள பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வலுவூட்டுவதற்கான பாடத்திட்டத்துடன் இரண்டு புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன; பல புதிய கற்கை நெறி அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன; திருத்தியமைக்கப்பட்டுள்ள கற்கை நெறி அலகுகள் சேர்க்கப்பட்டுள்ளன; அனைத்து உறுப்பினர்களினதும் பதவிக்காலம் 2014 ஜனவரியுடன் காலாவதியாகியமையினால் அனைத்து கற்கைசபைகளினதும் உறுப்புரிமை மீள உருவாக்கப்பட்டது.

### 1.3. வருடாந்த காங்கிரஸ்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள், நிறுவனத்தின் அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோர் ஆராய்ச்சியினூடாக தாங்கள் பெற்றுக் கொண்ட அறிவினைக் கலந்துரையாடி, பகிர்ந்து பரப்பப் பங்கெடுக்கும் மேடைத் தளமாகவும் நிறுவகத்தின் வருடாந்த பஞ்சாங்க புகழ் பெற்ற நிகழ்வுக்கான ஒன்றாகவும் காணப்படும். நிறுவகத்தின் வருடாந்த காங்கிரஸின் வெள்ளி விழா கொண்டாட்டத்தைக் கண்டதனையிட்டு மீளாய்வு ஆண்டு விஷேடமானதாகக் காணப்பட்டது. இந்நிகழ்வு, மாலைதீவுக்கான எப்.ஏ.ஓ. பிரதிநிதியான திருமதி பெத்.எஸ் கிரௌபோட் அவர்களின் அனுசரணையின் கீழ் கண்டியிலே 2013 நவம்பர் 20-22 வரை மாபெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விலே நிறுவகத்தினதும் மற்றும் அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா ஆகியவற்றிலிருந்து பங்குபற்றிய சொற்பமான சர்வதேச ஆராய்ச்சியாளர்களினால் 10 சுவரொட்டிகள் உட்பட 55 சமர்ப்பணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மிகச்சிறந்த 12 சமர்ப்பணக்காரர்களுக்கு 12 தலைப்புகளில் விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர்கள், கடந்தகால வருடாந்த காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய அனைவரும் நிறுவகம் மற்றும் வருடாந்த காங்கிரஸ் ஆகிய இரண்டையும் போற்றத்தக்க பொருளாக/நிகழ்வாக மாற்றியமைத்த தங்களது பெறுமதியான பங்களிப்புக்காக அவர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் இஞ்ஞாபகார்த்த நிகழ்விலே பாராட்டப்பட்டனர்.

### 1.4 அடைவுகள்:

1981 ஆம் ஆண்டு நிர்மானிக்கப்பட்ட நிறுவகத்தின் பிரதான கட்டிடத்திற்கு முகப்புத் தோற்றம் ஒன்று கொடுக்கப்பட்டது. வகுப்பறைகளின் எண்ணிக்கை 13 இருந்து 17 வரை அதிகரிக்கப்பட்டு கலை வசதிகளுடன் கூடிய மதிப்பு வழங்கப்பட்டது. இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட சூழலினூடாக கற்பித்தல், கற்றலில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வசதியளிக்கவும் உரிய நேரத்தில் தீர்மானமெடுத்தல், தனது பணிக்குழுவின் வினைத்திறனையும் வினையாற்றலையும் வலுப்படுத்தல் ஆகியவற்றுக்கு அதிகாரிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு முகாமைத்துவ தகவல் முறைமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நிறுவகத்தின் மூலதன மானியம் பௌதீக உட்கட்டமைப்பை மேம்படுத்த வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டது. நிகழ்ச்சித்திட்ட கட்டணங்களை சேகரிக்கும் பணி 80% வரை அடைந்துள்ளது. நிலையான கண்காணிப்பு, முடுக்கிவிடப்பட்ட உத்திகள் காரணமாக நிறுவகத்தின் வரலாற்றுடன் ஒப்பிடுகையில் இது ஒரு பாரிய மேம்பாடாகும்.

நகல் நிரந்தர சொத்துப் பதிவினைத் தயாரிக்கும் பணியும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. அத்தோடு ஒரு தசாப்பதத்திற்கு மேலாக எழுப்பப்பட்டு வரும் கணக்காய்வுக் கேள்விகளைக் குறைக்க பல முயற்சிகளும் கூட எடுக்கப்பட்டுள்ளன. ஒரு இலிகிதர் (தரம் III), 03 தொழிலாளிகள் ஆகியோரை ஆட்சேர்ப்புச் செய்ததன் மூலமாக 04 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும், முழு நேர ஆசிரியர் ஒரு சிரேஷ்ட பேராசிரியர் ஆகியோரை ஆட்சேர்ப்புச் செய்து கற்கை சபைகளின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வசதியளிக்கப்பட்டது. சாரதிப் பதவிக்கான புதியதோர் ஆளணிப் பதவி அங்கீகரிக்கப்பட்டது.

### 1.5 தீர்க்கப்படாமையும் நியாயப்படுத்தலும்

மீளாய்வு ஆண்டின் போது குறிப்பிடத்தக்க எந்தத் தோல்வியும் எதிர்ப்படவில்லை. எனினும், மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு மாணவர்களை அதிகரிக்கும் முயற்சி மேம்படுத்தப்படவில்லை. அத்தோடு விலகிச் செல்லும் வீதத்தையும் கூட கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் புலமைப்பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டும் கூட எதிர்பார்க்கப்பட்டவாறு வெளிநாட்டு மாணவர் தொகையும் அதிகரிக்க முடியவில்லை. நாட்டின் மத்தியிலிருந்து நிறுவகம் தூர அமைந்திருந்ததால், வெளிநாட்டு மாணவர்களுக்கு வதிவிட வசதிகள் இல்லாமை என்பன தோல்விகளுக்கான காரணங்களாகக் கூற முடியும். வெற்றிடமான பதவிகளை நிரப்ப பின்பற்றப்படும் நடைமுறைக்கான தன்மையினைக் கருத்திற் கொண்டு தகுதியான விண்ணப்பதாரிகள் இன்மையினால் மேலும் இரண்டு வெற்றிடப் பதவிகளை நிரப்ப முடியவில்லை.

## 1.6 எதிர்காலத் திட்டங்கள்

பின்பற்றப்பட்டு வருவதனைப் போன்று எதிர்காலத்திலும் கூட தரம் பிரதானமையமாக நிறுவகத்தில் கருதப்படும். இம்மைற் கல்லை அடைய, 2014 இருந்து இலங்கை தர உறுதிப்பாட்டு கட்டமைப்பின் பிரகாரம் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் அதிகாரமளிக்க முயற்சிகள் முடுக்கிவிடப்படவுள்ளன. யெசுஹா தொழில்நுட்ப நிறுவகம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வி.ப.பி.நி. ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் 2014 மார்ச் மாதம் அளவில் கானாவிலே உரிய கற்கை சபை உயிரியல் புள்ளி விபரவியலிலே விஞ்ஞான முதுமானி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை கடல் கடந்த நிலையில் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கானா, அதனை அண்மித்த நாடுகளிலிருந்து 20 மாணவர்களை ஆரம்பமாக சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்காக நிறுவகத்தின் கல்விசார் அலுவலர்கள் கொடுக்கப்பட்ட நேரசூசிக்கிணங்க கற்பித்தலுக்காக கானாவுக்கு செல்லவுள்ளனர். சந்தை வீதங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவகம் வழங்குகின்ற அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் கற்கை நெறிக் கட்டணத்தை அதிகரிக்க நிறுவகம் மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது. மிக முக்கியமாக, விஷேடமாக உணவை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சியினை மேற்கொள்ள மத்திய ஆய்வுகூடத்தினை நிறுவவும் அதன் கிளைகளை திறந்து வைக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. கோப்பின் சிபாரிசுக்கிணங்க, முதலாவது கிளை கொழும்பிலும் அதன் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு மற்றையது கிளிநொச்சியிலும் அமைய இருக்கின்றது. மேலும், தங்குமிட வசதியினை வழங்கவும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் பேராதனைப் பல்கலைக்கழகத்திடமிருந்து கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்ளவும் கூட நடவடிக்கை எடுக்கப்படும். 2014 – 2017 க்கான கூட்டுத் திட்டத்தில் அதாவது எதிர்காலத்தில் நிதியியல் வாய்ப்பு- பாதிக்கப்பட்டுள்ள பிரதான நோக்கங்களில் ஒன்றை அடைந்து கொள்வதையே இவ்வனைத்து முயற்சிகளும் இலக்காகக் கொண்டிருக்கும்.

## 2. வளங்கள், மாணவர்கள் பற்றிய விபரங்கள் - 2013

| கற்கை நெறி | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | அலுவலர்கள் பரம்பல் (நிரந்தர அலுவலர்கள் மாத்திரம்) | | | |
|---|---|---|---|---|---|
| | | கல்விசார் அலுவலர்கள் | கல்விசாரா அலுவலர்கள் | கல்விசார் துணை அலுவலர்கள் | மொத்தம் |
| ப.பி.டிப்ளோமா | | 02 | 43 | 01 | 46 |
| எம்.எஸ்.சி | | | | | |
| எம்.பி.ஏ | | | | | |
| எம்.பில். | 408 | | | | |
| பீ.எச்.டி | | | | | |
| தற்காலிக | | | | | |
| **மொத்தம்** | **408** | **02** | **43** | **01** | **46** |

2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வளங்கள் மாணவர்களை மேற்குறித்த அட்டவணை காட்டுகின்றது. நிறுவனத்தின் பல்வேறு பட்டபின்படிப்பு பட்டங்களுக்காகப் பதிவு செய்த 408 மாணவர்களையும் நிறுவனத்தில் சேவையாற்றும் நிரந்தர அலுவலர் ஆளணியினரையும் மீளாய்வு ஆண்டு கண்டு கொண்டது. 2013 ஆம் ஆண்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்வதில் தடையில்லாமை காரணமாக அதிக மாணவர் தொகையினைப் பதிவு செய்திருந்தது. கல்விசார் தரங்களுக்காகக் காணப்படும் 08 ஆளணி பதவிகளில் சிரேஷ்ட பேராசிரியர் ஒருவருக்கான பதவி தற்காலிக அடிப்படையில் நிரப்பப்பட்டதுடன் 01 சிரேஷ்ட விரிவுரையாளருக்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி 01 போதகர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். தேவைக்கேற்றவாறும் தேவையேற்படும் போதும் நிரப்பப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இப்பதவிகள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன. எனினும், இதே மீளாய்வு ஆண்டின் போது வெற்றிடமான கல்விசாரா அலுவலர் தரங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| நிறுவகம் | கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் | உள்ளீர்ப்பு 2013 | உள்ளீர்ப்பு 2012 | பட்டம் பெற்றவர் எண் 2013 |
|---|---|---|---|---|
| விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் | 1. ப.பி.டிப்ளோமா | - | 10 | 04 |
| | 2. எம்.எஸ்.சி | 328 | 03 | 204 |
| | 3. எம்.பி.ஏ | 45 | 03 | 36 |
| | 4. எம்.பில் | 31 | 03 | 14 |
| | 5. பீ.எச்.டி | 04 | 14 | 06 |
| | 6. தற்காலிக | - | 02 | - |
| | **மொத்தம்** | **408** | **35** | **272** |

மேற்குறித்த அட்டவணை 2013 ஆம் ஆண்டுக்கான மாணவர் உள்ளீர்ப்பு, பட்டம் பெற்ற புள்ளிவிபரங்களைக் காட்டுகின்றது. அடிக்கடி 04 மாதங்களுக்கும் மேலாக நிலவிய பல்கலைக்கழக முறைமையின் கல்விசார் மற்றும் கல்விசாரா அலுவலர்களின் வர்த்தக ஒன்றிய நடவடிக்கை காரணமாக 2012 ஆம் ஆண்டுக்கான மாணவர் இணைவு மிக மோசமாக பாதிக்கப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டு மாணவர் இணைவில் அதிகரிப்பைக் கண்டுகொண்டது. 2013 ஆம் ஆண்டு பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை எம்.எஸ்.சி, எம்.பி.ஏ, எம்.பில், பீ.எச்.டி ஆகிய பட்டங்களுக்காக முறையே 2008,2006,2003 ஆகிய ஆண்டுகளிலிருந்து பதிவு செய்தவர்களைக் கொண்டிருப்பதனால் 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையுடனும் பட்டம் பெற்ற எண்ணிக்கையுடனும் நேரடித் தொடர்பு எதுவும் காணப்படவில்லை. முன்னைய 02 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பட்டம் பெறுவதிலும் மாணவர் சேர்விலும் அதிகரிப்புக் காணப்பட்டது.




வரைபு 1 - 2011, 2012, 2013 இல் பட்டமளிப்பு




வரைபு 2 - 2011, 2012, 2013 இல் மாணவர் சேர்ப்பு

இரண்டு வரைபுகளும் மீளாய்வு ஆண்டுக்கான பட்டமளிப்பு, மாணவர் சேர்வு புள்ளிவிபரங்களை விளக்குகின்றன. 2013 ஆம் ஆண்டு போதியளவு மாணவர் காணப்படாமையினால் உயிரியல், புள்ளிவிபரவியல், பட்டப்படிப்பு டிப்ளோமா தவிர 2013 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற எண்ணிக்கையில் ஓரளவு அதிகரிப்புக் காணப்பட்டது.

## 3. வெளிநாட்டு மாணவர் விபரம்

| கல்விசார் நிகழ்ச்சிகள் | உள்ளீர்ப்பு 2013 | உள்ளீர்ப்பு 2012 | பட்டம் பெற்றோர் எண் 2013 |
|---|---|---|---|
| 1. ப.பி.டிப்ளோமா | - | - | |
| 2. எம்.எஸ்.சி | 01* | - | |
| 3. எம்.பி.ஏ | - | - | |
| 4. எம்.பில் | - | - | |
| 5. பீ.எச்.டி | 02** | 01 | |
| 6. தற்காலிக | - | 02 | |
| **மொத்தம்** | 03 | 03 | |

*நைஜீரிய நாட்டவர்,**தாய்லாந்து நாட்டவர்கள்

2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கையினை இவ்வட்டவணை காட்டுகின்றது. மீளாய்வு ஆண்டின் போது பட்டப்படிப்பைத் தொடர 03 வெளிநாட்டு மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர்; இவர்களில் எம்.எஸ்.சீ பட்டத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட நைஜீரியாவைச் சேர்ந்தவர் உயர் கல்வி அமைச்சின் 100 புலமைப் பரிசில் திட்டத்தைப் பெறுகின்ற ஒருவராவர்.

## 4. 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கல்விசார் அலுவலர்களின் விபரங்கள் (நிரந்தர அலுவலர்கள் மாத்திரம்)

| விடயம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | | பேராசிரியர் | | துணை பேராசிரியர் | | சிரேஷ்ட விரிவுரையாளர் | | விரிவுரையாளர் | | கல்விசார் அலுவலர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருத்தமில்லை | ஆங்கில மொழி | ஆ | பே | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| | | 1 | | | | | | | 1* | | | 1 | | 2 | 1 |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | 1 | | | | | | | 1 | | | 1 | | 2 | 1 |

ஆ- ஆண், பெ- பெண்,* சிரேஷ்ட உதவி நூலகர்

மேற்குறித்த அட்டவணையானது பணிப்பாளர், சிரேஷ்ட உதவி நூலகர் ஆகியோர்களைக் கொண்ட நிறுவகத்தின் கல்விசார் அலுவலர்களை விபரிக்கின்றது. இது தவிர, கல்விசார் துணை அலுவலரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உறுப்பினர் அதாவது முறைமைப் பகுப்பாளரும் கூட இவ்வட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். எனினும், நிறுவகத்தில் காணப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிப் பதவிகளைப் பயன்படுத்தி நிறுவகத்தின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிரேஷ்ட பேராசிரியர், 01 போதனாசிரியர் ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இதற்காக உருவாக்கப்பட்ட வருமானத்திலிருந்து சம்பளங்கள் செலுத்தப்பட்டன. அனைத்து கல்விசார் செயற்பாடுகளும் பிரதானமாக பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட இடைவருகை அலுவலர்களால் நடாத்தப்பட்டன.

## 5. 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கல்விசாரா அலுவலர்களின் விபரங்கள் (நிரந்தர அலுவலர்கள் மாத்திரம்)

| கிளை | அதி சிரேஷ்ட | | சிரேஷ்ட அலுவலர் | | கனிஷ்ட அலுவலர் | | சிற்றூழியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| பொது நிருவாகம் | | 03 | - | - | 04 | - | 09 | 01 |
| மாணவர் அனுமதி | - | 01 | - | 02 | 02 | 01 | 01 | - |
| கணக்குகள் | 01 | - | - | 01 | 05 | - | 01 | - |
| நூலகம் | - | - | - | 02 | - | 01 | 04 | 01 |
| த.தொ.அலகு | | | | | 01 | - | 02 | |
| **மொத்தம்** | 01 | 04 | - | 05 | 12 | 02 | 17 | 02 |

கல்வி சாரா அலுவலர்கள் நிறுவனத்தின் கல்விசாரா பணிக்குழு இடது பக்கத்தில் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டவாறு அமைந்துள்ளது.

ஆளணியினர் ஓய்வு பெறுவதன் மூலமாக ஏற்படும் வெற்றிடத்தை நிரப்பபுவது ஆட்சேர்ப்புச் செய்வதற்காகக் குறிப்பிப்ப ட்டுள்ள நடைமுறை காரணமாக தடைப் பட்டுள்ளது.

01. நிருவாக மட்டமும் நிறைவேற்று மட்டமும்
02. சிரேஷ்ட அலுவலர் தரங்கள்
03. இலிகிதர், துணை தரங்கள்
04. மேற்குறித்த தரங்களுக்கு கீழுள்ளவை

மீளாய்வு ஆண்டின் போது இலிகிதர் தரம் III, தொழிலாளி தரம் III ஆகியவற்றுக்கான வெற்றிடங்களை நிரப்ப 04 ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்ய வி.ப.பி.நி இனால் முடிந்துள்ளது. வரவேற்பாளர், சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) ஆகியோர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்ப பொருத்தமான ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்ய செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள பிரச்சினைகள் காரணமாக அவற்றை நிரப்பும் நிலைமையில் நிறுவகம் காணப்படவில்லை.

### 5.1 ஆட்சேர்ப்பு:

கல்விசாரா அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது, அதன் விபரங்கள் கீழ்வருமாறு:

01. திரு.பீ.ஜி.எல்.எஸ் ரட்னசிறி இலிகிதர் தரம் III ஆக 2013-11-23 இருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்.

பின்வரும் மூன்று ஆளணியினர் தொழிலாளிகள் தரம் III ஆக 2013-11-04 இருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

01. சஞ்சீவ செனவிரத்ன
02. எச்.எம்.யு.கே. ஹேரத்
03. எச்.எம்.டி. ஜாயா பண்டார

### 5.2 வி.ப.பி.நி. அலுவலர்கள் கலந்து கொண்ட பயிற்சித் திட்டங்களும் செயலமர்வுகளும்

மீளாய்வு ஆண்டின் போது நிறுவகம் தனது அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க கவனத்தைச் செலுத்தியிருந்தது. நிறுவகம் தனது அலுவலர்களின் அறிவினை விரும்பத்தக்க மட்டங்களுக்கு கொண்டுவர அவர்களைப் பயிற்றுவிக்கக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நிறுவகம் கைப்பற்றிக் கொண்டது.

மீளாய்வு ஆண்டின் போது நூலகம் உட்பட வி.ப.பி.நி இன் நிருவாக அலுவலர்கள், துணை அலுவலர்கள் ஆகியோர் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அதன் விபரங்கள் பின்வருமாறு:

நிறுவகத்தின் பிரதிப் பதிவாளரான திருமதி எஸ்.ஹேரத், உதவிப் பதிவாளரான திருமதி காஞ்சனா ஹேரத் ஆகியோர் பின்வரும் பயிற்சித் திட்டங்களில் கலந்து கொண்டனர்:

- இளைஞர் விவகார, திறன் அபிவிருத்தி அமைச்சின் வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் நடாத்தப்பட்ட கூறுவிலை மதிப்பீடு தொடர்பான பயிற்சித் திட்டம்.

- இலங்கை பட்டைய கணக்காளர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை அரச கணக்காளர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பாரிய அளவிலான பொருள் தருவிப்புத் தொடர்பான பயிற்சித் திட்டம்.
- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அலுவலர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட 03 பயிற்சித் திட்டங்கள்
    - சமர்ப்பிக்கும் திறன்கள்
    - உள்ளக வெளியக கணக்காய்வு விசாரணைகளைக் கையாளுதல்
    - திணைக்கள பொருள் பட்டியலின் பொதுப் பொறுப்பாண்மையும் முகாமைத்துவமும்

மேலும், ப.மா.ஆ. உலக வங்கியின் எச்.ஈ.ரீ.சீ. ஆகியன இணைந்து நடாத்திய மனித வள அபிவிருத்தி, தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்தில் பிரதிப் பதிவாளரான திருமதி எஸ்.ஹேரத் பங்கு பற்றியிருந்தார்.களனிப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை கற்கை நிலையம் பால் நிலை பிரதான செல்வழி தொடர்பாகநடாத்திய செயலமர்வுத் தொடர்களிலும் கூட அவர் பங்குபற்றியிருந்தார். களனிப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை கற்கை நிலையம், பொதுநலவாய பல்கலைக்கழக சங்கம், கெயர் இன்டர்நெஷனல் போன்றவற்றினால் இணைந்து இந்நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

திரு சமன் ஜயகொடி, சிரேஷ்ட உதவிப் பொருளாளர் பின்வரும் பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றினார்.

- புதிய வரி மறுசீரமைப்புக்கள்
- இலங்கை கணக்கியல் நியமங்கள்
- திணைக்கள பொருட்பட்டியலின் பொது பொறுப்பாண்மையும் முகாமைத்துவமும்

இதற்கப்பால், பிரதிப் பதிவாளர், சிரேஷ்ட உதவிப் பொருளாளர் ஆகிய இருவரும் மீளாய்வு ஆண்டின் போது கூட்டுத்திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பாக உயர்கல்வி அமைச்சு நடாத்திய பல செயலமர்வுகளில் பங்குபற்றினார்.

உதவிப் பதிவாளரான திருமதி.காஞ்சனா ஹேரத் விடய இலிகிதரான திரு.எச்.பீ.கே கருணாரத்த அவர்களுடன் திறன் அபிவிருத்தி நிதிய லிமிடட், இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு ஆகியன நடாத்திய வினைத்திறனான வாகன முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர்.

நிறுவகத்தின் முறைமைப் பகுப்பாய்வாளரான திரு.ஏ.ஜி.ஹேமஜித் ப.மா.ஆ. உலக வங்கியின் எச்.ஈ.ரீ.சீ கருத்திட்டம் ஆகியன இணைந்து நடாத்திய இணைய அபிவிருத்தி, முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வொன்றில் பங்குபற்றியிருந்தார்.

பணிப்பாளரின் பிரத்தியேக செயலாளரான திருமதி.சீ.தஹநாயக்க 2013 ஆம் ஆண்டு பின்வரும் செயலமர்வுகளில்/பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றியிருந்தார்:

- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அலுவலர் அபிவிருத்தி நிலையம் நடாத்திய வினைத்திறனான சமர்ப்பிக்கும் திறன்கள்
- தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்கள்

சிரேஷ்ட உதவி நூலகரான திருமதி ஐ.முதன்னாயக்க இதழ்களுக்கான இலங்கை நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்காக கொழும்பு பல்கலைக்கழக நூலகத்தில் நடைபெற்ற இரண்டு நாள் செயலமர்வில் கலந்துகொண்டார்.

2013 டிசம்பர் 04 ஆந் திகதி **திணைக்கள பொருட்பட்டியலின் பொதுப் பொறுப்பாண்மையும், முகாமைத்துவமும்** தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழக அலுவலர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற ஒருநாள் செயலமர்வு ஒன்றிலே நிறுவகத்தின் சிரேஷ்ட அலுவலர் உதவியாளரான எஸ் அமுனுகம, நூலக உதவியாளரான என்.தென்னகோன், களஞ்சிய காப்பாளரான திரு.சந்திம பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கணக்குப் பிரிவைச் சேர்ந்த திருமதி.ஹேமந்தி சமரசிங்ஹ, திரு அநுறுத்த ஹேரத் ஆகியோர் பேராதனைப் பல்கலைக்கழக அலுவலர் அபிவிருத்தி நிலையம் நடாத்திய ''உள்ளக கணக்காய்வு விடயங்கள்'' என்ற தலைப்பிலான செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர்.

நிறுவகத்தின் சிரேஷ்ட தொழிலாளரான திரு.ஆர்.டி. வீரசிங்ஹ, சாரதியான திரு.ஜகத் தீக்ஷன ஆகியோர் இளைஞர் விவகார, அபிவிருத்தி அமைச்சின் திறன் அபிவிருத்தி லிமிட்ட் நடாத்திய அலுவலக உதவியாளர், சாரதியாளர் திறன்கள் என்ற தலைப்பிலான செயலமர்வில் பங்குபற்றினர்.

## 6. ஆராய்ச்சி, புத்தாக்கங்கள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள் - 2013

| விடயம் | வெளியிடப்பட்ட | வர்த்தகமயமாக்கப்பட்ட | சமர்ப்பிக்கப்பட்ட |
|---|---|---|---|
| ஆராய்ச்சிகள் | - | - | 26 |
| புத்தாக்கங்கள் | | | |
| இதழ்கள் | 04 | 04 | 04 |
| புத்தகங்கள் | | | |
| கட்டுரைகள் | 55 | | 55 |
| ஏனையவைகள் | | | |
| மொத்தம் | 59 | 04 | 85 |

2013 ஆம் ஆண்டு நிறுவகம் நடாத்திய நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள், செயலமர்வுகள் என்பவற்றின் ஆராய்ச்சி, புத்தாக்கங்கள், வெளியீடுகள், விபரங்கள் ஆகியன தொடர்பான விபரங்களை மேலுள்ள அட்டவணை காட்டுகின்றது. 25 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் அளவில் கொண்டாடப்பட்ட நிறுவகத்தின் வருடாந்த காங்கிரஸினது முடிவுகளே இதழ்களும் கட்டுரைகளுமாகும். 55 கட்டுரைகளில் 10 சுவரொட்டிகளாகும்.

மீளாய்வு ஆண்டின் போது 11 கற்கைச் சபைகளும் 23 பட்டதாரி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கின. 26 சமர்ப்பணங்கள் மேற்கொள்ளப்பட்டன; அவற்றில் 05 மாணவர்கள் பூர்த்தி செய்த கலாநிதி, தத்துவ முதுமானியுடன் தொடர்புடையனவாகும். பி.எஸ்/ விவசாய பொறியியல் மேற்கொண்ட இணைந்த கருத்திட்டமான கெப்நெட் இன்டநெஷனல் மீளாய்வு ஆண்டின் போது 31 கருத்தரங்குகளை நடாத்தியது.

இவ்வருடம் கூட வி.ப.பி.நி. நடாத்திய இறுதிப் பரீட்சையில் அதிகூடிய ஜி.பீ.ஏ புள்ளிகளைப் பெற்ற திரு.எஸ்.சிறிகிறிஷ்ணா அவர்களுக்கு வருடாந்த காங்கிரஸிலே ஜோச்சியம் ஞாபகார்த்த விருது வழங்கப்பட்டது.

## 7. அ) நிகழ்ச்சித் திட்டங்கள்,கருத்தரங்குகள், மாநாடுகள், செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் - 2013

| நிகழ்ச்சித் திட்டங்கள் | கலந்து கொண்டவை | பூரணப்படுத்தப்பட்டது | சமர்ப்பிக்கப்பட்டது |
|---|---|---|---|
| ப.பி.பட்டங்கள் | - | - | 23 |
| ப.பி.டிப்ளோமா | - | - | - |
| பட்டநிகழ்ச்சித் திட்டங்கள் | 23 | - | - |
| டிப்ளோமா நிகழ்ச்சிகள் | - | - | - |
| சான்றிதழ் நிகழ்ச்சிகள் | - | - | - |
| சுருக்கங்கள் | - | - | 55 |
| புத்தக அத்தியாயங்கள் | - | - | |
| சமர்ப்பணங்கள் | - | - | 26 |
| செயற்படும் ஆய்வுரைகள் | - | - | |
| பயிற்சித் திட்டங்கள் | 21 | - | - |
| செயலமர்வுகள் | - | - | 08 |
| கருத்தரங்குகள் | - | - | 31 |
| மொத்தம் | 44 | - | 143 |

7.ஆ) வருடாந்த காங்கிரஸ் - விவசாய பட்டப்படிப்பின் படிப்பு நிறுவகம் - 2013




படம்: வருடாந்த காங்கிரஸின் அங்குரார்ப்பணம்- 2013

நிறுவகத்தின் வருடாந்த காங்கிரஸின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தை மீளாய்வு ஆண்டு காண்பதனால் வி.ப.பி.நி. இற்கு இது விஷேடமான ஒன்றாகக் காணப்பட்டது. இது நிறுவகத்தின் வருடாந்த பஞ்சாங்கத்தின் ஒரு புகழ் பெற்ற நிகழ்வாகும். காங்கிரஸ் என்பது உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள், நிறுவகத்தின் அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோர் ஆராய்ச்சியினூடாக தாம் பெற்றுக்கொண்ட அறிவினைக் கலந்துரையாட, பகிர்ந்து கொள்ள, பரப்ப பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய மேடையாகும். இலங்கை, மாலைத்தீவுக்கான எப்.ஏ.ஓ பிரதிநிதியான திருமதி. பெத்.எஸ் கிரவ்போட்டின் அனுசரணையின் கீழ் கண்டியிலே 2013 நவம்பர் 20 – 22 வரை மாபெரும் அளவில் இந்நிகழ்வு கொண்டாடப்பட்டது.

10 சுவரொட்டிகள் உட்பட 55 சமர்ப்பணங்களை நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்களும் அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து பங்குபற்றிய சில சர்வதேச ஆராய்ச்சியாளர்களும் இந்நிகழ்விலே சமர்ப்பித்தனர். மேலும் நிறுவகம், வருடாந்த காங்கிரஸ் ஆகிய இரண்டையும் குறிப்பிடத்தக்க நிகழ்வாக மாற்றிய நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர்கள், கடந்த கால வருடாந்த காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர்கள் வழங்கிய பெறுமதியான பங்களிப்புக்காக அவர்களைக் கௌரவப்படுத்த இஞ்ஞாபகார்த்த நிகழ்விலே அவர்கள் அனைவரும் பாராட்டப்பட்டனர்.

பின்வரும் 12 மாணவர்கள் நிறுவகத்தின் 25 வது வருடாந்த காங்கிரஸிலே மிகச் சிறந்த சமர்ப்பணகாரர்களாகத் தீர்மானிக்கப்பட்டனர்

டி.செனவிரத்ன– கால்நடை விஞ்ஞான, வனவிலங்கு

யு.எம்.அருண குமார - தாவர நோயாக்கிகளும் இடைத் தொடர்புகளும்

எம்.கே.என் குமாரி – விவசாயத்திற்கான நீரின் தரம்

ஏ.ஆர்.குணவர்தன – உயிரியல் ஆக்கிரமிப்பும் உயிரியல் பல்வகைத் தன்மையும்

எம்.ஏ.பீ.டபிள்யு.கே. மலவியனாரச்சி – காலநிலை, பயிர் முகாமைத்துவம்

டி.போப்பிட்டிய – ஒணவு, அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம்

மிகச் சிறந்த சமர்ப்பணர்கள் 25வது காங்கிரஸிலே தங்களது விருதிைப் பெறுகின்றனர்



மிகச்சிறந்த சமர்ப்பணர் ஒருவர் தனது விருதினை பணிப்பாளர்/வி.ப.பி.நி. இருந்து பெறுகின்றார்.



மிகச்சிறந்த சமர்ப்பணர் ஒருவர் பணிப்பாளர்/வி.ப.பி.நி. இருந்த தனது விருதினைப் பெறுகின்றார்.

டீ.பீ.மாணவடு- அணுத்திரண்ம உயிரியலும் உயிரியல் தொழில் நுட்பமும்

எச்.எம்.டி.ஏ.கே.ஹேரத்- பயிர் உற்பத்தி முறைமைகள்

கே.ஹேரத்- விவசாயத்திற்கான கணினியியல் முறைகள்

சீ.ஏ.கே. திஸாநாயக்க - பொருளியலும் விரிவாக்கலும்

யு.கே.பீ.எஸ்.சஞ்ஜீவனி - மண்வள முகாமைத்துவம்

ரீ.ஏ.பி.டி.சஞ்ஜீவ - சுவரொட்டி சமர்ப்பணம்

8.அ) கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சி/ விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்,குறுங்கற்கை நெறிகள் பற்றிய விபரங்கள் - 2013

பயிற்சித் திட்டம் - குழுப்பணியும் தலைமைத்துவமும்



செயலமர்வு –"பரிசோதனைகளின் வடிவமைப்பும் பகுப்பாய்வும்



| எண் | நிகழ்ச்சி /தலைப்பு | நிறுவகம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01. | பரிசோதனைகளின் வடிவமைப்பும் பகுப்பாய்வும் | வி.ப.பி.நி. /உயிரியல் புள்ளிவிபரவியல் | 08 | 01/05/13 |
| 02. | நீர் தொழில்சார் தினம் | பி.எஸ் /விவசாயப் பொறியியல் | 150 | 01/10/13 |
| 03. | குழுச் செயற்பாடும் தலைமைத்துவப் பயிற்சித் திட்டமும் | பி.எஸ் /விவசாய விரிவாக்கம் | 45 | 22-24/11/13 |
| 04. | பரிசோதனைகளின் வடிவமைப்பு, பகுப்பாய்வு நுட்பங்களை மாதிரியெடுத்தல் | வி.ப.பி.நி. /பி.எஸ்விவசாயப்புள்ளி விபரவியல் | 130 | 04-06/09/13 |
| 05. | கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நீர் விநியோகத் திட்டங்களிலுள்ள பங்குதாரர்களுக்கான வரட்சி இடர் முகாமைத்துவம் | வி.ப.பி.நி. /பி.எஸ் விவசாயப் பொறியியல் | 45 | 16/05/13 |
| 06. | இலங்கை வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலே பால் நிலைநீர் கலந்துரையாடல்கள் | வி.ப.பி.நி. /பி.எஸ் விவசாயப் பொறியியல் | 42 | 24-25/06/13 |
| 07. | இலங்கையின் மலைநாட்டிலே நீரேந்து பிரதேசத்தை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த காணி, நீர் வள முகாமைத்துவம் | வி.ப.பி.நி. /பி.எஸ் விவசாயப் பொறியியல் | 35 + 40 | 14-15/03/13<br>29-30/07/13 |

2013 ஆம் ஆண்டு பல கற்கைச் சபைகள் மேலே குறிப்பிடப்பட்டவாறு உள்நாட்டிலேயே செயலமர்வுகளை/கருத்தரங்குகளை/குறுங் கற்கை நெறிகளை நடாத்தி அவற்றினூடாக நிறுவகம், உரிய சபைகள் ஆகிய இரண்டின் நலனுக்கான வருமானத்தை ஈட்டிக்கொண்டன. கடந்த காலங்களிலே பல சபைகள் இவ்வகைச் செயற்பாடுகளை நடாத்தாமை காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது ஒரு மிகப் பெரும் மேம்பாடாகும். இது ஒரு மிகப் பெரும் பங்களிப்பினை கெப்நெட் லங்கா என்ற சர்வதேச ஒத்துழைப்பு கருத்திட்டத்தினூடாக விவசாயப் பொறியியல் கற்கைச்சபை வழங்கியுள்ளது.

## 8. ஆ) 2013 இல் நிறுவகம் அனுசரணை வழங்கிய சர்வதேச மாநாடுகள், செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| எண் | நிகழ்வு /தலைப்பு | நிறுவகம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01. | விதை உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் (நபோலிய இனத்தவர்களுக்காக) | வி.ப.பி.நி. / விவசாயப் பொறியியல் | 11 | 05-10/05/13 |
| 02. | கட்டமைப்புப் பொறியியலும் நிர்மான முகாமைத்துவமும் பற்றிய 4வது சர்வதேச மாநாடு – நகர நீர் சுற்றாடல்: கண்காணித்தலும் முகாமைத்துவமும் | வி.ப.பி.நி. / விவசாயப் பொறியியல் | 07 | |





விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் விவசாயப் பொறியியல் கற்கைச் சபையானது இரண்டு சர்வதேச மாநாடுகளை நடாத்தியது: அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 2வது மாநாடு கெப்நெட் லங்காவின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது. முதலாவது மாநாடு அதன் பீட உறுப்பினர்களின் உதவியுடன் நடாத்தப்பட்டது.

## 9. அ) 2013 ஆம் ஆண்டு அலுவலக உறுப்பினர்களும் மாணவர்களும் பெற்றுக் கொண்ட விருதுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் அலுவலர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்நாட்டு | 12 | - | 12 |
| தேசிய விருதுகள் | - | - | - |
| சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஏனைய | - | - | - |
| **மொத்தம்** | 12 | - | 12 |

வி.ப.பி.நி பெற்றுக்கொண்ட விருதுகள் பற்றிய விபரங்களை இவ்வட்டணை காட்டுகின்றது.வருடாந்த காங்கிரஸ்-2013 இல் மிகச் சிறந்த சமர்ப்பணங்களிற்காகத் தீர்மானிக்கப்பட்ட வி.ப.பி.நி இன் மாணவர்கள் 12 விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். இவ்வனைத்து விருதுகளும் உள்ளகத்திலேயே வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டைப் போலன்றி இவ்வாண்டு எந்த ஆசிரியரும் விருதுகளைப் பெற்றிருக்கவில்லை.

## 10. இவ்வாண்டு ஆரம்பித்த புதிய கற்கை நெறிகள் பற்றிய விபரங்கள்

நிறுவகம் 03 புதிய கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்த முயற்சிகள் எடுத்திருந்த போதிலும் பூங்கனியியல் எம்.எஸ்.சீ, பெருந்தோட்ட பயிர் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி என்பன அங்கீகாரத்திற்காக ப.மா.ஆ இற்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பரிசீலிப்பதற்கான நீண்ட நடைமுறை காரணமாக, இவ்வாண்டு அவற்றை ஆரம்பிக்கும் நிலையில் நிறுவகம் இல்லை. கற்கைச் சபை /விவசாய உயிரியல் முன்மொழிந்த எம்.எஸ்.சி. பட்டம் நிகழ்ச்சித் திட்டம் பல்கலைக்கழக அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்திற்காக இன்னும் காத்துக் கிடக்கின்றது.

## 11.பொது நிருவாகம்

### 11.1 பழைய கட்டிடத்தை புதுப்பித்தல்

1981 இல் நிர்மானிக்கப்பட்ட நிறுவகத்தின் பிரதான கட்டிடத்திற்கு புதுப் பொலிவு ஒன்று வழங்கப்பட்டது. வகுப்பறைகளின் எண்ணிக்கை 13 - இருந்து 17 வரை அதிகரிக்கப்பட்டு கலை வசதிகளுடன் கூடிய சிறப்பு வழங்கப்பட்டுள்ளது.



**புதுப்பித்த பின்னர் வி.ப.பி.நி. இன் பழைய கட்டிடம்**

இணையத்தை அடிப்படையாகக் கொண்ட சூழலினூடாக ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய இருசாராரும் கற்பித்தல் கற்றலில் ஈடுபடவும் அதிகாரிகள் உரிய நேரத்தில் தீர்மானத்தை எடுக்கவும் அதன் பணிக்குழுவின் வினைப்பயன், செயற்திறன் ஆகியவற்றை வலுப்படுத்தல் என்பவற்றிற்கு வசதியளிக்கும் வகையில் முகாமைத்துவம் தகவல் முறைமை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. கணக்காய்வு விசாரணைகள், முகாமைத்துவ குறைபாடுகள் போன்றவற்றைக் குறைக்க பொது நிருவாக நடைமுறை மீள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இவ்வழிமுறையிலே, மீளாய்வு ஆண்டின் போது இருமுறை சந்தித்த தொழில்முயற்சித் துறையின் பீ.ஈ.டி. சுற்றறிக்கை இல.12 இல் குறிப்பிடப்பட்டவாறு சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. செயன்முறைச் செயற்பாடுகளுடன் தொடர்பான பிரச்சினைகள் இச்சபையில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கணக்காய்வுக் குழு மீளாய்வு ஆண்டின் போது நான்கு தடவைகள் சந்தித்துக் கொண்டன. நிலையான சொத்துப் பதிவைத் தயாரிக்கும் பணி பூரணப்படுத்தப்பட்டு ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2013 ஆம் ஆண்டுக்கான பொருட்தருவிப்புத் திட்டத்தை தயாரிப்பதற்கும் கூட கவனம் செலுத்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட அறிக்கையிலே கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தவும் கூட சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. முகாமைத்துவ சபை, கணக்காய்வுக்குழு, கற்கைச் சபைக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் 2013 ஆம் ஆண்டுக்காக குறிப்பிடப்பட்டன.

நிருவாக நடைமுறையை மீள ஒழுங்கமைப்பதற்கான விதிகள், ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் ஆலோசனை வழங்கும் பணி பேராசிரியர் ஒருவரிடம் வழங்கப்பட்டது.

கூட்டுத்திட்டம் 2014-2018 இனைத் தயாரிக்க அவர் ஏற்கனவே அவர் கலந்து கொண்டு வெற்றிகரமாக தயாரிக்கப்பட்டதுடன் 2013 நவம்பர் 29 ஆந் திகதி செயலமர்வும் நடாத்தப்பட்டது. பின்வரும் ஆவணங்களைத் தயாரிக்கவும் கூட அவர் கலந்து கொண்டிருந்தார்.

01. நடைமுறைக் கையோடு
02. கூட்டுத் திட்டம் - 2014 – 2018
03. ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் ஆகியோர்களுக்கான கையேடு

## 11.2 நிறுவகத்தின் முகாமைத்துவ தகவல் முறைமை

முகாமைத்துவ தகவல் முறைமை உலக வங்கியின் உதவியுடன் தாபிக்கப்பட்டு மீளாய்வு ஆண்டின் பிற்பகுதியில் செயற்படுத்தப்பட்டது. ஆரம்பமாக மாணவர் பதிவு மற்றும் நிருவாகத்துடன் தொடர்பான அனைத்து விடயங்களும் த.மு.மு. இன் ஊடாக நிருவகிக்கப்பட்டது. இதன் விளைவாக மாணவர் பதிவுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் கூட்டு மேற்பார்வை செய்தல், மாணவர்களுக்குப் பதிவுகளை வழங்குதல், மாணவர்கள் அவர்களுடன் இணையத்தினூடாக தொடர்பு கொள்ளல், அனைத்துப் பரீட்சைகளையும் கண்காணித்தல், ஆசிரியர்கள் போன்றோர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படுதல் ஆகியன சுமூகமாக நடைபெற்றன.

வி.ப.பி.நி. இன் அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோர்களுக்காக வாழ்வை இலகுபடுத்திய மு.த.மு அவர்களின் பிரச்சினைகளுக்கான எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கையை துரிதப்படுத்த ஆதரவளித்தது.

## 11.3 நலன்புரியும் ஓய்வும்

ஊழியர்களின் பணி, தனிப்பட்ட வாழ்வு ஆகியவற்றுக்கிடையிலான உறுதியான நடுநிலைமையைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் ஆரோக்கியமான பௌதீக அமைப்பிலுள்ள ஓய்வான மனம் எப்பொழுதும் ஊழியர் செயலாற்றலை மேம்படுத்தும் அதேவேளை புத்தாக்க எண்ணக் கருத்துக்களைத் தூண்டுவதனால் நல்ல பௌதீக, உளவியல் ஆரோக்கியத்தை பேணுவதன் முக்கியத்துவத்தையும் வி.ப.பி.நி. புரிந்துள்ளது. இவ்வுயரிய எண்ணக் கருத்துக்களை மனதிற் கொண்டு, வாய்ப்புக்கள், நலன்கள் என்பவற்றைக் கொண்டு அவர்களை சந்தோசப்படுத்தும் அதேவேளை அவர்களது நேரடி உடன் குடும்ப உறுப்பினர்களுக்கும் விரிவுபடுத்தல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு மீள் உருவாக்க செயற்பாடுகளை ஒழுங்கு செய்தது. நடுநிலையான வாழ்வொன்றைப் ணுேவதைக் கருத்திற் கொண்ட ஊழியர் சந்திப்புக்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள் என்பன இதில் உள்ளடங்கும்.

மீளாய்வு ஆண்டின் போது விவசாயப் பட்டபின் படிப்பு விளையாட்டு, ஓய்வு சங்கம் தாபிக்கப்பட்டது; இது வருடம் முழுவதும் விளையாட்டு, ஓய்வுச் செயற்பாடுகளில் சுறுசுறுப்புடன் ஈடுபட அலுவலர்களுக்கு வழியமைத்தது.

சங்கம் தாபிக்கப்பட்டதன் பின்னர், 2014 ஜனவரியின் ஆரம்பத்தில் முடிவடைந்த பணிப்பாளர் விருதுகள் ஆண்டின் பிற்பகுதியிலே சிக்ஸர்-ஏ-ஸைட் கிரிக்கட் போட்டியொன்றை நிருவாகம் ஒழுங்கு செய்தது. வி.ப.பி.நி மாணவர்கள், ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள், கல்விசார் துணை அலுவலர்கள் ஆகியோர்களைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகம், வி.ப.பி.நி ஆகிய இரண்டினதும் அலுவலர்கள் இப்போட்டியில் பங்குபற்றினர். இப்போட்டி பல்கலைக்கழக, கிரிக்கட் மைதானத்தில் நடாத்தப்பட்டதுடன் விஷேட பண்பாகவும் விளங்கியது.




சிக்ஸர்.ஏ.லைட் கிரிக்கட் போட்டியின்
முதலாம் இடம்- பே.ப குழு




ஸிக்ஸர்-ஏ-ஸைட் கிரிக்கட் போட்டியின்
இரண்டாம் நிலை- வி.ப.பி.நி மாணவர்கள்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கிரிக்கட் குழு அமர்ந்திருக்கும் இ-வ-1- ஏ.ஜி.ஆர்.பி.ஜயதிலக்க, எழுந்திருக்கும் இ-வ-7- வருண விஜேநாயக, வி.ப.பி.நி. பிரதிநிதி

வி.ப.பி.நி. இன் இரண்டு அலுவலர்களான ஏ.ஜி.ஆர்.பி.ஜயதிலக்க, வருண விஜேநாயக்க ஆகியோர் அரச சேவையின் "பி" பிரிவின் நொக் அவுட் போட்டியில் பங்குபற்றிய பல்கலைக்கழக கிரிக்கட் குழுவின் உறுப்பினர்களாக கடமையாற்றினர். குழு அரையிறுதி வரைக்கும் சென்றது.

மீளாய்வு ஆண்டில் பல்கலைக்கழக கிரிக்கட் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி அகில இலங்கை அரச சேவை லீக் கிரிக்கட் போட்டியிலேயும் திரு ஏ.ஜி.ஆர்.பி.ஜயதிலக்க பங்கெடுத்தார். பௌதீகக் கல்விப் பிரிவு அலுவலர்கள் இரு குழுக்களையும் வழிநடாத்தினார்.

## 11.4 நிறுவகத்தின் வருடாந்த சுற்றுலா

நிறுவகத்தின் அலுவலர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் 2014 பெப்ரவரியில் இடம்பெற்ற அவர்களது வருடாந்த நலன்புரி சுற்றுப் பயணத்திலே மஹாமெவ்னா உயன விஹாரை கிதுல்கல ஆகியவற்றுக்கு சென்றிருந்தனர். அவர்களுக்குப் பூரண திருப்தியைக் கொடுத்த கிதுல்கல ஆற்றிலே நீரை எற்றும் நிகழ்விலும் பங்கெடுத்துக் கொண்டனர்.

மேலும், அலுவலர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் வி.ப.பி.நி. மற்றும் தங்களது தனிப்பட்ட அனுசரணையுடன் வருடத்தின் பிற்பகுதியிலே மீள் உருவாக்க செயற்பாடுகளின் ஒரு பகுதியாக 02 நாள் சுற்றுலாப் பயணமாக வில்பத்து சரணாலயத்துக்குச் சென்றனர். அவர்கள் போகும் வழியில் இலங்கை ஹொல்ஸிம் சீமெந்து தொழிற்சாலை, புத்தளம் உப்புக் கூட்டுத் தாபனம்,நுரைச்சோலை மின்வலு நிலையம் ஆகியவற்றுக்கும் சென்றனர்.இது சுற்றுப் பயணத்திற்கும் விஷேடமாக அவர்களது குழந்தைகளுக்கு ஒரு பெறுமதியைச் சேர்த்தது.



வி.ப.பி.நி. இன் அலுவலர்கள்,அவர்களது குடும்பத்தினர் 2013 பெப்ரவரியில் இடம் பெற்ற அவர்களது வருடாந்த நலன்புரி சுற்றுப் பயணத்தின் போது மஹாமெவ்னா விஹாரையிலே



வி.ப.பி.நி. இன் அலுவலர்கள்,அவர்களது குடும்பத்தினரும் நுரைச்சோலை மின்வலு நிலையத்திலே

# 12. விவசாய நூலகம் - வருடாந்த அறிக்கை 2013

**அட்டவணை1-2013 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட நூலக ஒதுக்கீடுகள்**

| | |
|---|---|
| வி.ப.பி.நி. ஒதுக்கீடு | ரூபா 1,000,000.00 |
| பீட ஒதுக்கீடு | 928,940.00 |
| மொத்தம் | ரூபா 1,928,940.00 |

**கொள்வனவுகள் - புத்தகங்கள்**

2013 ஆம் ஆண்டின் போது மொத்தமாக 410 புத்தகங்கள் நூலகத் தொகுப்புடன் சேர்க்கப்பட்டன. விவசாய பீடம், வி.ப.பி.நி. இன் இரு நிறுவனங்களின் கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பொருந்தும் வகையில் அவற்றின் கற்பிக்கும் அலுவலர்கள் சிபாரிசு செய்த 94 பாடப் புத்தகங்களும் உள்ளடங்கும். 410 புத்தகங்களில் அறுபத்தி மூன்று புத்தகங்கள் கனடா, ஒட்டாவா பிரிவு- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தின் அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளப்பட்டன.

**அட்டவணை - 2 தொகுப்புடன் சேர்க்கப்பட்ட புத்தகங்கள் பற்றிய விபரங்கள்**

| விபரம் | எண்(கள்) | பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|
| வி.ப.பி.நி. நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 06 | 13,831.96 |
| பீட ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 88* | 1,253,360.10** |
| கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் மொத்த தொகை (வி.ப.பி.நி, பீடம்) | 94 | |
| தொகுதியுடன் சேர்க்கப்பட்ட வி.ப.பி.நி ஆய்வு கட்டுரைகளின் எண்ணிக்கை | 36 | |

* 01 இறுவட்டு உட்பட ** பீட ஒதுக்கீட்டை விஞ்சியது.

**அட்டவணை 3 - அன்பளிப்புக்கள்**

| விபரம் | எண்(கள்) | பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|
| கனடா ஒட்டாவாப் பிரிவு- பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 63 | 355,661.72 |
| ஏனைய அன்பளிப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 217 | 792,709.87 |
| சேர்க்கப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை (கொள்வனவுகள், அன்பளிப்புக்கள்) | 410 | |

**பருவகால இதழ்கள்**

10 வெளிநாட்டு பருவகால இதழ்கள் உட்பட பதினைந்து பருவகால இதழ் தலைப்புகளுக்கு வி.ப.பி.நி. நிதிகள் மூலம் 2013 இல் பங்களிப்புச் செய்யப்பட்டன. பெரும்பாலும் வி.ப.பி.நி. இன் முழுமையான ஒதுக்கீடும் 2013 ஆம் ஆண்டு பருவகால இதழ்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

**அட்டவணை 4 - நூலக பாவனையாளர் வகுதிகள்**

| விபரம் | எண்ணிக்கை (கள்) | பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|
| வி.ப.பி.நி இனால் ஏற்பாடு செய்யப்பட்ட பருவகால இதழ்களின் எண்ணிக்கை | 14 | 982,576.56 |
| பீட ஒதுக்கீட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட பருவகால இதழ்களின் எண்ணிக்கை | 01 | 2,000.00 |
| ஏற்பாடு செய்யப்பட்ட பருவகால இதழ்களின் மொத்த எண்ணிக்கை (வி.ப.பி.நி, பீடம்) | 15 | 984,576.56 |

**அட்டவணை 5 - 2013 இல் பதிவுசெய்யப்பட்ட நூலக பாவனையாளர்கள்**

| வகுதி | எண்ணிக்கை |
|---|---|
| பட்டப்பின்படிப்பு மாணவர்கள் | 1225 |
| பட்டப்படிப்பு மாணவர்கள் | 912 |
| கல்விசார் அலுவலர்கள் (நிரந்தரம்) | 226 |
| கல்விசார் அலுவலர்கள் (தற்காலிக) | 18 |
| இலிகிதர், அதனையொத்த சேவைகள் | 06 |
| நூலகத்தின் குறுங்கால பாவனையாளர்கள் | 31 |
| மொத்தம் | 2387 |

2013 ஆம் ஆண்டு மொத்தமாக 5372 புத்தகங்கள் மாணவர்கள்/ஆசிரியர்கள் மத்தியில் வலம்வந்துள்ளது.

**நூலகத்திற்கிடையிலான கடன்கள்**

2013 ஆம் ஆண்டு இலங்கையிலுள்ள ஏனைய நூலகங்களிலிருந்து கட்டுரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை 14 ஆகும். 14 வேண்டுகோள்களில் 10 கட்டுரைகளை நாம் பெற்றுகொண்டோம். நாம் ஏனைய நூலகங்களிலிருந்து 23 வேண்டுகோள்களைப் பெற்றுக்கொண்ட போதிலும் விவசாய நூலகம் 20 கட்டுரைகளை ஏனைய நூலகங்களுக்கு விநியோகித்திருந்தது.

***அக்ரிநெட் (விவசாய தகவல் வலையமைப்பு) உள்ளடக்கப் பக்க சேவை***

அக்ரிநெட் இதழ் உள்ளடக்கப் பக்க சேவையின் கீழ் இலங்கையின் விவசாய நிறுவனங்களிலுள்ள விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்களின் (என்,ஏ.ஆர்.எஸ் விஞ்ஞானிகள்) நலன்கருதி இலங்கையிலுள்ள விவசாய நூலகங்களுக்கு மத்தியல் இதழ் உள்ளடக்கப் பக்கங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய நூலகம் 70 இதழ் உள்ளடக்கப் பக்கங்களை விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளித்துள்ளது.

**இலக்கிய ஆராய்வு**

பீடம் மற்றும் வி.ப.பி.நி. ஆகிய இரண்டினதும் ஆராய்ச்சி மாணவர்கள் இலக்கிய ஆய்வுக்காக சீ.ஏ.பி. இறுவட்டு- ரொம் தரவுத் தளத்தைப் பயன்படுத்தினர். 2013 ஆம் ஆண்டு ஐம்பத்திரண்டு (52) சீ.ஏ.பி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**அயன விவசாய ஆராய்ச்சி விற்பனைகள்/பரிமாற்றங்கள்**

**அட்டவணை 6 - வி.ப.பி.நி இதழான 'அயன விவசாய ஆராய்ச்சி' இன் விற்பனைப் பணிகள்**

| விபரம் | எண்ணிக்கை(கள்) |
|---|---|
| 2012இல் விற்பனை செய்யப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை (முழு வால்யூம்) | 12 |
| 2012இல் விற்பனை செய்யப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை (தனி வெளியீடுகள்) | 15 |
| ஏனைய நிறுவனங்களின் வெளியீடுகளுக்காக அவற்றுடன் பரிமாறப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை | 10 |

**தே. வி. ம. இன் தேசிய டிஜிட்டல் மயப்படுத்தும் கருத்திட்டம்**

நிறுவன ரீதியான களஞ்சியத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஏனைய வெளியீடுகளையும் ஸ்கேன் செய்வதற்காக என்.எஸ்.எப் இனால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரான சஞ்சே பிரைவட் லிமிடட் இனால் 2013 செப்தம்பர் 30 ஆந் திகதி வி.ப.பி.நி. இன் ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பினை டிஜிட்டல் மயப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

**வகித்த பதவிகள்:**

ஐ.முதன்னாயக்க, சிரேஷ்ட உதவி நூலகர், விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபையின் (வி.ஆ.கொ.ச) அக்ரிநெட் ஆலோசனைக் குழுத் தலைவராக தொடர்ந்து சேவையாற்றினார்.

**வெளியீடுகள்:**

டபிள்யு.பீ.ரீ.டி. தில்றுக்ஷி, ஐ. முதன்னாயக்க- விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் சேவைகளினூடாக தகவல்களைப் பரப்புதல். இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைக் குறிப்புகள், வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு, 2013 பெப்ரவரி 07, மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்.

ஐ.முதன்னாயக்க, சிரேஷ்ட உதவி நூலகர்,இலங்கை பல்கலைக்கழக நூலகர் சங்க இதழுக்கான மீழாய்வுக் குழாமில் சேவையாற்றினார், வால். 17, எண்.1, 2,2013.

ஐ.முதன்னாயக்க, சிரேஷ்ட உதவி நூலகர்,களனி பல்கலைக்கழகத்தில் இரண்டு முதுமானி ஆராய்ச்சிக் கட்டுரைகளை (எம்எல்எஸ்) மேற்பார்வை செய்தார். ஆதன் விபரங்கள் பின்வருமாறு:

**தலைப்புக்கள்:**

1. இலங்கை மத்திய மாகாணத்தில் பொது நூலகங்களிலே சமூக தகவல் சேவைகள்
2. விவசாயத் தகவல்களை விவசாயிகளுக்குப் பரப்புதல்

# 13. 2013 இல் நிறுவனத்தின் நிதிச் செயற்பாடு

## 13.1. மீண்டுவரும் செலவின விபரங்கள்

| விடயம் | 2011(ரூபா) | | 2012(ரூபா) | | 2013(ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | உண்மையான | ஒதுக்கீடு | உண்மையான | ஒதுக்கீடு | உண்மையான |
| அ) தனிப்பட்ட சம்பளங்கள் | 40,718,000 | 32,281,916 | 44,764,000 | 39,408,203 | 41,203,000 | 39,907,916 |
| ஆ) பயணம் | 350,000 | 86,548 | 255,000 | 69,593 | 100,000 | 90,183 |
| இ) விநியோகங்கள் | 3,365,000 | 2,530,910 | 3,173,000 | 2,992,028 | 3,625,000 | 3,303,068 |
| ஈ) பராமரிப்பு | 950,000 | 713,751 | 1,451,000 | 737,389 | 985,000 | 1,239,819 |
| உ) ஒப்பந்த சேவைகள் | 6,055,000 | 4,840,840 | 6,076,000 | 5,158,518 | 5,635,000 | 5,448,947 |
| ஊ) ஏனையவைகள் | 17,920,000 | 12,240,319 | 19,910,000 | 9,598,707 | 18,290,000 | 19,137,868 |
| மொத்தம் | 69,358,000 | 52,693,284 | 75,629,000 | 57,964,438 | 69,838,000 | 69,127,802 |
| நிதி வழங்கப்பட்ட மூலம் | | | | | | |
| அரசாங்க மானியம் | 22,585,072 | | 15,400,000 | | 19,000,000 | |
| % ஆக | 33% | | 20% | | 27% | |
| உருவாக்கப்பட்ட நிதிகள் | 46,772,928 | | 60,229,000 | | 50,838,000 | |
| % ஆக | 67% | | 80% | | 73% | |




2013 ஆம் ஆண்டு நிறுவனத்தின் மீண்டுவரும் செலவினத்துக்கான திறைசேரி ஒதுக்கீடு 19.0 மில். ஆகவும் மூலதன செலவினத்துக்கான ஒதுக்கீடு 9.2 மில். ஆகவும் காணப்பட்டது. கடந்த வருட ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில் இது முறையே ரூபா 3.6, 0.6 மில்லியன்கள் அதிகரிப்பாகும். இவ்வாண்டுக்கான மொத்த உண்மையான மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகள் முறையே ரூபா 69.08 மில்.,ரூபா 13.04 மில். கள் ஆகும்.

மொத்த மீண்டுவரும் செலவுக்கு ஆரம்பமாக உருவாக்கப்பட்ட நிதியத்தினாலும் (73%) மீதி திரட்டிய நிதியத்தினாலும் (27%) நிதி வழங்கப்பட்டது. சுமார் 58%மீண்டுவரும் செலவு நிரந்தர அலுவலர்களின் சம்பளங்கள், கூலிகள் மற்றும் இடை வருகை விரிவுரைக் கட்டணங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட வேதனங்களுக்கானதாகும். கற்கைநெறிப் பொருட்கள், விஷேட சேவைகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான போக்குவரத்து மானியங்கள், வருடாந்த காங்கிரஸ் போன்றன உள்ளிட்ட ஏனைய மீண்டுவரும் செலவு மீளாய்வு ஆண்டின் மொத்த மீண்டுவரும் செலவில் சுமார் 27% ஆகும். மீண்டுவரும் செலவு பற்றிய தொகுப்பு மேற்குறித்த உருவில் தரப்பட்டுள்ளது.

## 13.2 மூலதனச் செலவு பற்றிய விபரங்கள்

| விடயம் | 2011 (ரூபா) | | 2012 (ரூபா) | | 2013 (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | உண்மையான | ஒதுக்கீடு | உண்மையான | ஒதுக்கீடு | உண்மையான |
| அ) தளபாட, அலுவலக உபகரணங்களை வாங்குதல் | 4,000,000 | 70,826 | 2,000,000 | 2,988,881 | 2,500,000 | 3,976,203 |
| ஆ) ஆய்வுகூட, கற்பித்தல் உபகரணங்களை வாங்குதல் | - | - | - | 667,520 | - | - |
| இ) கட்டிடங்கள், கட்டமைப்புக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | 6.000,000 | - | 7,800,000 | 267,937 | 6,706,000 | 8,430,449 |
| ஈ) மோட்டார் வாகனங்கள் | - | - | - | 8,350,000 | - | - |
| உ) ஏனையவைகள்- நூலகப் புத்தகங்கள், பருவகால இதழ்கள் | 1,500,000 | 325,087 | 1.500,000 | 8,023 | - | 996,409 |
| **மொத்தம்** | **11,500,000** | **395,913** | **9,800,000** | **12,282,361** | **9,206,000** | **13,403,061** |




நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கிட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம்

இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற போதிலும், பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக உள்ள ரூபா 81,659,309 கிரயத்திலான 08 சொத்து உருப்படிகள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2013 ஆம் ஆண்டின் போது பணிப்பொறுப்பு அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சாரதியொருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 255,642 கூட்டுத்தொகையான வருடாந்த சம்பளம், சம்பளம் மற்றும் வேதனங்கள் செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்படாமல் விசேட சேவைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் ரூபா 204,367,725 கூட்டுத்தொகையான கீழே காண்பிக்கப்பட்டுள்ள 13 கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| காணியும் கட்டிடங்களும் | 73,738,756 | மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு, |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1,655,035 | - மேற்படி - |
| அலுவலக உபகரணங்கள் | 11,163,827 | - மேற்படி - |
| மோட்டார் வாகனங்கள் | 14,495,000 | - மேற்படி - |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 34,001,492 | - மேற்படி - |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 44,488,869 | - மேற்படி - |
| தொலைபேசிகள் | 34,915 | - மேற்படி - |
| வீடமைப்பு செயற்திட்ட உபகரணங்கள் | 490,749 | - மேற்படி - |
| நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | 711,654 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| ஏனைய வைப்புக்கள் | 157,800 | - மேற்படி - |
| முற்பணமாக செலுத்தப்பட்ட பதிவு மற்றும் ஏனைய கட்டணங்கள் | 481,911 | - மேற்படி - |
| முற்பணமாக செலுத்தப்பட்ட பாடநெறிக் கட்டண வருமானம் | 20,349,767 | - மேற்படி - |
| முற்பணமாக கிடைத்த வருமானம் | 2,597,950 | - மேற்படி - |
| | 204,367,725 | |

2.3 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிறுவனமொன்றின் மேலதிக பணத்தை உரிய அமைச்சரின் அங்கீகாரத்துடனும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடனும் முதலீடு செய்ய முடியுமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 121,000,000 தொகைக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 மற்றும் 3.8 ஆம் பந்திகள் | கடன்தொகையொன்று வழங்கப்பட்டதன் பின்னர் அடுத்த மாதத்திலிருந்தே கடன் தவணைப் பணம் மாதாந்தம் அறவிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 27 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைக்காக ஏப்ரல் - மற்றும் திசெம்பர் மாதங்களில் ரூபா 214,535 கூட்டுத்தொகையான கடன் தவணைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ii) XIV ஆம் அத்தியாயத்தின் 28.5 மற்றும் 28.6 ஆம் பந்திகள் | பிரயாணம் முடிவடைந்து 30 நாட்களுக்குள் பிரயாணச் செலவின விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 58,523 கூட்டுத்தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | (i) நிதிப் பிரமாணம் 371(4) | கணக்கீட்டு உத்தியோகத்தராலும் கூட பயன்பாட்டிற்கு எடுத்தல் பொருத்தமற்ற செயற்பாடுகளுக்காக உப கட்டுநிதி பெற்றுக்கொள்ள முடியாத போதிலும், 03 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 60,000 கூட்டுத்தொகையான முற்பணத் தொகையில் 39 சதவீதம் அல்லது ரூபா 23,488 தொகை உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் மீள நிரப்பப்பட்டிருந்தது. |
| | (ii) நிதிப் பிரமாணம் 751 | கிடைக்கப்பெறுகின்ற அனைத்துப் பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 41,000 ஆன பொருள் பெறுகை இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை/ பல்கலைக் கழகங்கள் தாபனவிதிக் கோவையின் XXVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பந்தி | 06 மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு வாகனத்திலும் எரிபொருள் நுகர்வு தொடர்பாக முறையான பரிசோதனையொன்று தேர்ச்சிபெற்ற பொறியியலாளர் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்திடம் காணப்பட்ட 04 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறான பரிசோதனையொன்று நடாத்தப் பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | கணனிகள் தொடர்பாக புறம்பாக பதிவேடொன்று சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2010 செப்தம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளரின் ஆகக்கூடிய தொலைபேசி செலவினத்தை மிகைத்து செலவினத்தை மீள்நிரப்பியதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 42,097 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் தனிப்பட்ட உதவியாளரின் ரூபா 24,219 தொகையான தொலைபேசி செலவினம் மீள்நிரப்பப்பட்டிருந்தது. |
| (எ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95(02) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய PE 1/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | திறைசேரியின் அனுமதியொன்று பெற்றுக்கொள்ளாமல் கட்டணங்கள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், படிகள் செலுத்த முடியாத போதிலும், குறுகியகால பாடநெறி கூட்டிணைப்பு நடவடிக்கைகளுக்காக படிகள் மற்றும் வருடாந்த மாநாட்டிற்கான கூட்டிணைப்புக் கொடுப்பனவாக மொத்தம் ரூபா 120,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஏ) | 2003 மே 29 ஆம் திகதிய UGC/HR/6/1/13(1) ஆம் இலக்கம் மற்றும் 2003 திசெம்பர் 29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து குறுங்கால பாடநெறிகளுக்காக விரிவுரைக் கட்டணம் மற்றும் செயல்முறை பரிசோதனைக் கட்டணமாக ரூபா 253,850 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஐ) | 2011 பெப்ரவரி 09 ஆம் திகதிய 13/2008(IV) ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கை | திணைக்களத் தலைவர் அல்லது அதற்கு சமமான உத்தியோகத்தர்களுக்காக மாத மொன்றிற்கான அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் அளவு 140 லீற்றராக இருந்த போதிலும், பணிப்பாளருக்கு அவ்வெல்லை 170 ஆக கருதி சுற்றறிக்கைக்கு முரணாக கொடுப்பனவு செய்தமையின் காரணமாக 2013 சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 58,212 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஒ) | 2011 மார்ச் 07 ஆம் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் IRD/PAYE/REG/01 ஆம் இலக்க 2011 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் திருத்தப்பட்ட வரி அட்டவணை இலக்கம் 07 மற்றும் 01 | 30 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 125,523 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை |

2.4 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு மற்றும் சம்பள ஏற்றம் என்பவற்றை அரசாங்க ஊழியர்களுக்கு மாத்திரம் என 1996 மார்ச் 06 ஆம் திகதிய பீஎப்/1/174/11 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்திருந்த போதும் அதற்கு இணங்காத வகையில் 1996 ஆம் ஆண்டு முதல் 2013 மே மாதம் வரை ரூபா 1,307,794 தொகை மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 செப்தம்பர் 15 ஆம் திகதிய PED/58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைச்சபையின் செயலாளர்களுக்கும் மீளாய்வாண்டின் போது, முன்னைய ஆண்டிற்காக ரூபா 162,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகங்கள் தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதியின் IX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள், கடமை நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்படுமானால் மேலதிக நேரம் அல்லது விடுமுறை தினக் கொடுப்பனவு செலுத்த முடியுமான போதும், அதற்கு இணங்காத வகையில் 2012 ஆம் ஆண்டிற்காக 05 உத்தியோகத்தர்களுக்கும் 2013 ஆம் ஆண்டிற்காக 06 உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 127,303 தொகை கௌரவ கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3 நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மிகை ரூபா 34,250,532 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 21,271,268 ஆன மிகையாக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,979,264 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

மட்டுப்படுத்தல் ஆய்வுச் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ரூபா 67,192,332 தொகை நெதர்லாந்தின் வர்ஜினின்ஜன் பல்கலைக்கழகத்தினால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 111,677 தொகை செலவிடப்படாமல் எஞ்சியிருந்தது. கணக்காய்வு திகதியான 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையில் இத்தொகையை மீள் நிரப்புவதற்கு அல்லது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 நிதியத்தின் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த ரூபா 1,214,716 கூட்டுத்தொகையான 03 ஆய்வு நிதிய மீதிகள் 01 முதல் 04 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் அதிர்ச்சி மற்றும் வாயு பாய்ச்சலுடன்கூடிய பல்நோக்கு தேயிலை மற்றும் தேங்காய் நிர்மாணிப்பதற்கான அபிவிருத்தி என்ற பெயரிலான செயற்திட்டமொன்றிற்காக 2013 ஏப்ரல் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,180,090 தொகையில் 76 சதவீதமான ரூபா 840,822 தொகை செலவிடப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.3 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

2010/12 ஆம் ஆண்டுகளுக்குரிய பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்காக அச்சிடப்பட்டிருந்த ரூபா 88,200 பெறுமதியான 180 பாடநெறி கைநூல்கள் விற்பனை செய்யப்படாத இருப்பாக இனங்காணப்பட்டிருந்தது.

### 4.4 முறையாக கையேற்கப்படாத சொத்துக்கள்

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகம் அமைந்துள்ள காணியின் உரித்தை சட்டரீதியாகப் பொறுப்பேற்பதற்கு 2014 மார்ச் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்டரீதியாக பொறுப்பேற்கப்படாத காணிகளில் ரூபா 73,738,756 செலவு செய்யப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

### 4.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வளப் பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2010 திசெம்பர் 31 ஆம் திகதிய 26/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது 03 பதவிகளுக்காக மூன்று உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் சேர்த்து ரூபா 677,431 தொகை சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீசடி 12 ஆம் இலக்க ஆம் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டுத்திட்டமொன்று தயாரித்து நாளதுவரையாக்கப்பட்டு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பிவைக்க வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் கூட்டுத்திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2013 யூலை 26 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2013 மார்ச் 22 ஆம் திகதி முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயன் முன்னேற்றம் காலரீதியாக பரீட்சிப்பதற்காக நிறுவகத்தால் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க "உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டிக்கோவை" என்ற தலைப்பிலான முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 தொடர்பில் கவனத்தைச் செலுத்தி நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்துக்கொள்ள வேண்டிய போதிலும், அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கக்கூடிய வகையில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், நிறுவகத்தில் செயற்படுத்தப்படுகின்ற முகாமைத்துவ மற்றும் நிதிச் சூழல் மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் வருடாந்தம் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறித்த சுற்றறிக்கையின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அலகிலிருந்தும் தமது நிறுவனத்திற்காக காலாண்டிற்கு ஒருமுறை உள்ளக கணக்காய்வு அறிக்கையொன்றை தயாரிக்க வேண்டியதுடன், அது முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவில் கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தி வருடாந்தம் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கைகள் உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2.5 இன் பிரகாரம் வருடாந்த பாதீட்டு அறிக்கை கூட்டுத்திட்டத்தின் பிரகாரம், நீண்டகால நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் ஆண்டின் ஆரம்பத்தின் போது நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு கருவியாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் பணிப்பாளருக்கு அவ்வப்போது எனது அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆய்வுகள் மற்றும் மானியங்கள்
(ஆ) கணக்கீடு
(இ) பதிவேடுகளைப் பராமரித்தல்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) ஊழியர் கடன் நிர்வாகம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# விவசாய பட்டப்பின் கற்கைகள் நிறுவனம் பேராதனை கணக்காய்வு பதில்கள்

விசாரனை இல:- **CL/KD/J/PGIA/BD/1/13/10** திகதி:- 2015.04.23

கடிதக் குறிப்பு:- **உதவி கணக்காய்வாளர் அதிபதி அரச கணக்காய்வு பிரிவு**

விடயம்:- **கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2013**

---

தங்களால் எனக்கு அனுப்பப்பட்ட மேற்கூறிய இலக்கமும் 2014.12.11 ஆம் திகதியுமுடைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான தெளிவுகள்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துக்கள்

### 2.2.1 இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தரங்கள்

விவசாய பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் அட்டவணை ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. தேய்வுகள் கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாகியுள்ள நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டிற்காக அரச விலை மதிப்பீட்டு நிறுவனத்தின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு 2014 ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி இடம் பெற்ற 45 ஆம் கணக்காய்வுச் சபை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இது தொடர்பாக 2014.12.02 ஆம் திகதிய கடிதம் மூலம் மாகாண விலை மதிப்பீட்டு திணைக்களத்தை அறிவுறுத்தி அப்பணிகளுக்குத் தேவையான சொத்து விபரங்கள் அத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2.2. கணக்கீட்டு குறைபாடுகள்

2013 ஆம் ஆண்டு பணிச் சாட்டல் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சாரதிகளின் ஆட்சேகரிப்புக்காக அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கான நிதி ஒதுக்கங்கள் இருக்க வில்லை. எனவே அதற்கான நிதியொதுக்கங்கள் விஷேட சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கி அச் செலவுத் தலைப்பின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.2.3 கணக்காய்வுக்கான சாட்சிகள் காணப்படாமை:

| விடயம் | பெறுமதி | காரணங்களை தெளிவுபடுத்தல் |
| --- | --- | --- |
| காணியும் கட்டிடங்களும் | 73,738,756 | நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் அட்டவணையொன்று மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தால் பேணப்பட்ட பொருட் பதிவேடுகளையும் பௌதிக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சரி பார்க்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2012.12.31 ஆம் திகதிக்கு தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் அட்டவணை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>மேலும் 2013.12.30 ஆம் திகதி இடம் பெற்ற கணக்காய்வுச் சபையின் சிபாரிசின்படி திருத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் அட்டவணை 2013 இறுதி கணக்குகளுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அவ்வாறே 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு சபை வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் தேய்வு நிதியொதுக்குகள் முடிவடைந்தபின் நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு செய்யும் பணிகளை அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மூலம் செய்து கொள்வதற்காக மேற்கொண்ட கோரிக்கையின் பிரகாரம் சொத்துக்களை மீள் மதிப்பீட்டு செய்யும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி மீள் மதிப்பீட்டு பெறுமதிகளும் கருத்திலெடுக்கப்பட்டு தயாரிக்கப்படும் இறுதி நிலையான சொத்துக்கள் அட்டவணை 2014 ஆம் ஆண்டில் இறுதிக் |

| | | |
|---|---|---|
| | | கணக்கீடுகளுடன் கணக்காய்வுக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். |
| மரத்தளப்பாடங்களும், பொருத்துதலும் | 1,655,035 | அதே |
| மோட்டார் வாகனங்கள் | 14,495,000 | அதே |
| அலுவலக உபகரணங்கள் | 11,163,827 | அதே |
| இரசாயன கூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 44,448,869 | அதே |
| தொலைபேசி | 34,915 | அதே |
| வீட்டுத் திட்டத்தின் உபகரணங்கள் | 490,749 | அதே |
| நூலகப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் | 34,001,492 | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட வெளிவாரி அலுவலர்களை உள்ளடக்கிய சபையொன்றால் இக் கணக்கெடுப்புகள் 2014 யூலை மாதம் 24 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. பொருள் கணிப்பீட்டுச் சபையின் ஆரம்ப அறிக்கை நிறுவனத்தின் பணிப்பாளருக்கு 2014 நவம்பர் 15 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டது. பௌதிக அடிப்படையில் சரிபார்க்கப்பட்ட தொகைகளுக்கும் ஏடுகளில் காட்டப்பட்ட பெறுமதிகளுக்கும் இடையிலான வித்தியாசங்களுக்கு காரணங்கள் சிரேஷ்ட உதவி நூலகரால் தெளிவுப்படுத்தப்பட்டன. இதன் இறுதி அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கையெடுக்கப்படும். |
| ஏனைய வைப்புகள் | 157,800 | நிழுவைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் 2013.12.31 ஆம் திகதியில் அனுப்பப்பட்டது. |

| | | |
|---|---|---|
| கேள்வி வைப்புகள் | 44,492 | நிழுவைகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. |
| நிறுத்தி வைத்தல் வைப்புக்கள் | 657,834 | அதே |
| முன் செலுத்தப்பட்ட பதிவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் மூலமான வருமானங்கள் | 481,911 | நிழுவைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உரிய உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப் பெற்றவுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கின்றேன். |
| முன் செலுத்தப்பட்ட பாடநெறி கட்டண வருமானங்கள் | 20,349,767 | அதே |
| முன் கிடைத்த வருமானங்கள் | 2,597,950 | அதே |

## 2.3 சட்ட திட்டங்களுக்கும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கும் இணங்காமை:-

### அ. 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு:-

மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பாடநெறிக் கட்டணங்களதும் பல்வேறு நிறுவனங்களிலிருந்து ஆய்வுப் பணிகளுக்காக பெற்ற நிதிகளதும் தற்காலிக மிகைகள், குறுங்கால நிலையான வைப்புகள் மற்றும் அறிவித்தல் வைப்புகளாக 2008.03.03 ஆம் திகதிய TO/ DCF/30 ஆம் இலக்க திரைசேறி சுற்று நிருபத்தின் பிரகாரம் நிதிச் சபையின் சிபாரிசுகள் மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதி பிரகாரம் அரச வங்கிகளில் மட்டும் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் 2014.09.26 ஆம் திகதி நடைபெற்ற 27 ஆம் நிதிச் சபையின் சிபாரிசுகளின் படியும்

2014.11.28 ஆம் திகதி நடைபெற்ற 210 ஆம் இலக்க முகாமைத்துவ சபையின் அனுமதி மீது நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு தற்காலிக முதலீடு செய்யும் அதிகாரத் தத்துவத்தினை முகாமைத்துவ சபைக்கு வழங்குவதற்காக 2014.12.05 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுமதி கோரப்பட்டுள்ளமையை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. I. **தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7, 3.8 பந்திகள்:**

இலங்கை பல்கலைக்கழக மூலம் வழங்கப்பட்ட 88 ஆம் இலக்க 1978.03.02 ஆம் திகதிய வழங்கல்களுக்கும் நிதிச் சுற்று நிருபங்களுக்கும் ஏற்ப மார்ச், டிசம்பர் மாதங்களில் மாதாந்த சம்பளத்திலிருந்து கடன் தவணைகள் குறைக்கப்படாது என்பதுடன் உரிய மாதத்துக்கான வட்டிப் பணங்கள் மட்டும் குறைக்கப்படும். அவ்வாறே மேற்கூறிய வசதிகளில் அக்கரையற்ற ஊழியர்களிள் கடன் தவணைப் பணங்கள் அதற்குரிய வட்டியுடன் இம் மாதத்திக்கும் கழித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

II. **XIV ஆம் அத்தியாயத்தின் 285, 286 பந்திகள்:**

விவசாயப் பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தின் வெளிவாரி விரிவுரைகள் நடாத்தும் போது உரிய பாடங்களுக்கான விரிவுரைகள் நடாத்தி முடிக்கப்பட்டு பரீட்சைகள் நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டதன் பின்னரே கொடுப்பனவுகள் செலுத்தப்படும். அதற்கேற்ப பிரயாணக் கொடுப்பனவுகள் மீள் நிரப்பும் போது பிரயாணம் முடிவடைந்த திகதியல்லாமல் மேற்கூறிய நிபந்தனைகளை பூர்த்தி செய்து கொடுப்பனவுகள் கோரப்பட்ட தினமே கவனத்தில் எடுக்கப்படும். ஆயினும் 2014 மே மாதம் 3 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பித்து மேற்கூறிய நிபந்தனைகளை தீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி எதிர்காலத்தில் பிரயாணக் கொடுப்பனவுகளை மீள் நிரப்பும் போது பிரயாணம் முடிவடைந்த திகதியை அடிப்படையாகக் கொண்டு தாமதக் கட்டணங்களை அறவிட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இ. I. **நிதிப் பிரமாணங்கள் 371(4)**

கணக்காய்வு அறிக்கை வரைவில் குறிப்பிட்டுள்ளவாறு மூன்று சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை கவனத்திலெடுத்து ரூபா 20,000.00 வீதம் முற்பணங்கள் விடுவிக்கப்பட்டாலும் முற்பணங்களை விடுவிக்கும் போது எதிர்ப்பார்க்கப்பட்டவாறு செலவு ஏற்படவில்லை என்பதை

ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் முற்பணங்களை பெற்றுக் கொடுக்கும் போது இது தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களை அறிவுறுத்தல் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.

**II. நிதிப் பிரமாணங்கள் 351**

2013.03.14 ஆம் திகதி பிரதான களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெற்ற ரூபா 41,000.00 பெறுமதியான 4 டோனர்களின் பெறுமதி தவறுதலாக தொகை ஏட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை எனினும் பொருள் பெறுகை படிவமும் 11497 இன் கீழ் பிரதான களஞ்நியத்தின் பெறுகையொன்றாக குறிப்பிடப்பட்டு விநியோக இலக்கம் 19,192 மூலம் நிழற் பிரதியொடுத்தற் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்தவறு காரணமாக இறுதித் தொகையளவில் பாதிப்பு ஏற்படவில்லையென்பதுடன் பின்னர் குறிப்பொன்று மூலம் இப் பெறுகையையும் விநியோகத்தையும் ஏடுகளில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**ஈ. 1990 அக்டோபர் 10 ஆம் திகதிய 41 / 90 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்று நிருபம்:**

2013.12.31 ஆம் திகதிய 40 ஆம் இலக்க கணக்காய்வுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய நிபுணத்துவம் கொண்ட பொறியியலாளர் ஒருவரை கொண்டு எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்வதற்கேற்படும் சிரமத்தை கருத்திலெடுத்து அதனை நிறுவனத்தின் நிர்வாக தரத்திலுள்ள உயர் அதிகாரிகள் மூன்று பேரின் மேற்பார்வையில் செய்வதற்கு நடவடிக்கையெடுக்க அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி 2013 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் ஓடும் தரத்திலிருந்த வாகனங்களில் பணிப்பாளரின் உத்தியோக வாகனம் தவிர்ந்த மற்றைய 3 வாகனங்களுக்கும் மேற்கூறிய பரிசோதனை நடாத்தப்பட்டு வாகன ஓட்ட குறிப்புகளை ஒத்திசைவு செய்து பேணப்படுகின்றன.

**உ. 2002 நவம்பர் 28 ஆம் திகதி 1A1 / 2002/02 ஆம் இலக்க திரைசேரி செயலாளரின் சுற்று நிருபம்**

கணக்காய்வு அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளவாறும் திரைசேறி சுற்று நிருபத்தின்படியும் கணனிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**ஊ. 2010 செட்டெம்பர் மாதம் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபம்**

அரச அலுவலர்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு தொடர்பாடல் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2010.09.01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபத்தை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் பதிவீடு செய்யும் போது அதன் IV ஆம் இலக்க பிரிவு மூலம் ஆணைக்குழு சுற்று நிருபம் இலக்கம் 922 இல் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய தர மற்றும் கீழ்நிலை தரங்களுக்குரிய நிர்வாக தரத்திலுள்ள அதிகாரிகளுக்கு 4000.00 ரூபா எல்லைக்கு உட்பட்டு தொலைபேசிக் கட்டண செலவுகளை மீள் நிரப்பல் செய்ய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ஆணைக்குழு சுற்று நிருபம் இல 922 க்கு ஏற்ப கீழ்நிலை நிர்வாகத் தரத்திக்குரிய பிரத்தியேக செயலாளக்குரிய தொலைபேசி கட்டண மீள் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இக் கொடுப்பனவுகள் 2012 ஆம் ஆண்டில் 21 ஆம் இமலக்க நிதிச் சபையின் சிபாரிசின் படியும் 2012.11.12 ஆம் திகதி 1975 ஆம் இலக்க முகாமைத்துவ சபையின் அனுமதியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எ. **1994 ஜுன் 14 ஆம் திகதிய 95(2) ஆம் இலக்க அரச வர்த்தக முயற்சிகள் சுற்று நிருபம் மற்றும் 2003 ஜனவரி 29 ஆம் திகதிய PE1/17411-2003 ஆம் இலக்க நிதியமைச்சின் சுற்று நிருபம்.**

D.A.N தர்மசேன, 75,000.00:

விவசாயப் பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தால் 2013.05.05 திகதி முதல் 2013.05.11 திகதி வரை நேபாள அரசின் II நிர்வாக உத்தியோகத்தர்களின் பங்கு பற்றுதலுடன் நடாத்தப்பட்ட சர்வதேச செயலமர்வினை ஒருங்கிணைக்கும் பணிகளுக்காக 235 ஆம் இலக்க 2013.06.20 ஆம் திகதிய நிதிச் சபையின் சிபார்சு மற்றும் 202 ஆம் இலக்க 2013.09.27 டிஆம் திகதிய முகாமைத்துவ சபை கூட்டத்தின் அனுமதியின் மீது இக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே உரிய செயலமர்வு தொடர்பான கருத்திட்ட அறிக்கையை தயாரிப்பது முதல் செயலமர்வின் சகல ஒருங்கிணைப்புப் பணிகளுக்குமாக இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

B.L பீரிஸ், 10,000.00:

விவசாயப் பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தால் 2013.09.04 ஆம் திகதி முதல் 2013.09.06 திகதி வரை 130 அங்கத்தவர்கள் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்ட குறுகிய கால செயலமர்வின் ஒருங்கிணைப்புப் பணிகளுக்காக 2013.06.20 ஆம் திகதி நடைபெற்ற 23 ஆம் நிதிச் சபையின் சிபாரிசின் மீதும் 2013.09.27 ஆம் திகதி

நடைபெற்ற 202 ஆம் முகாமைத்துவ சபை கூட்டத்தின் அனுமதி பிரகாரமும் இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

R.M பொன்சேகா, 35,000.00:

விவசாயப் பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி நிதியேற்பாடுகளுக்கு உட்பட்ட பதவியாகிய வருடாந்த மாநாட்டின் ஒருங்கிணைப்பாளருக்கு 2013.09.05 ஆம் திகதி நடைபெற்ற 23 நிதிச் சபையின் சிபாரிசின் மீதும் 2013.09.27 ஆம் திகதி நடைபெற்ற 202 ஆம் முகாமைத்துவ சபை கூட்டத்தின் அனுமதி பிரகாரம் இக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏ. **2003 மே 29 திகதிய NGC/HR/6/1/13 (1) இலக்க 2003 டிசம்பர் 20 ஆம் திகதிய 837 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபம்:**

2013 மே 29 திகதிய NGC/HR/6/1/13 (1) இலக்க மற்றும் 2003 பெப்பரவரி 29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின்படி 837 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்கள் மூலம் பட்டப்பின் கற்கைகளுக்குரித்தான விரிவுரைகளுக்கும் செயன்முறைப் பரீட்சைகளுக்கும் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு செலுத்துவதற்காக உரிய நிதியொதுக்கங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச செயலமர்வு ஒன்றுக்குக்கும் குறுங்கால செயலமர்வு ஒன்றுக்கும் விரிவுரைகளும் செயன்முறைப் பரீட்சைகளும் நடாத்துவதற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளே கணக்காய்வு வரைவு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. எனவே மேற்கூறிய சுற்று நிருபத்தின் ஏற்பாடுகள் இக் கொடுப்பனவுகள் தொடர்பானதல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வாறே கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தை 2014.02.10 ஆம் திகதிய U.G.C/HR/6/1/13 (1) இலக்க சுற்று நிருபம் மூலம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விரிவுரைகளுக்கான கட்டணங்களுக்குரிய உயர்ந்த பச்ச எல்லையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறெனினும் இச்செயலமர்விற்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் நிதிச் சபையின் சிபாரிசுகளின்படி முகாமைத்துவ சபையால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவுரைகளும் செயன்முறைப் பரீட்சைகளுக்கும்

தயாராகுவதற்கு தேவைப்படும் காலம் மற்றும் நிபுணத்துவ அறிவு என்பவற்றை கவனத்தில் எடுத்து வழமையான விரிவுரைகளும் செயன்முறை பரீட்சைகளுக்குமான கட்டணங்களையும் விட அதிகமான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**ஐ. 2011.02.09 திகதிய 13 / 2008 iv ஆம் இலக்க பொது நிறுவாக சுற்று நிருபம்:**

பொது நிறுவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சி செயலாளரின் 13 / 2008 iv ஆம் இலக்க 2001.02.09 ஆம் திகதிய சுற்று நிருபம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் பதிலீடு செய்யப்படும் போது பல்கலைக்கழகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோக வாகனங்களுடைய அலுவலர்கள் நிச்சயிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளரக்கான மாதாந்த எரிபொருள் வழங்கல் எல்லை 170 லீற்றர் ஆக கருதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது என தெரியவந்தது. இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்று நிருகங்களின்படி ஆணைக்குழுவின் செயலாளருக்கு தாபனப் பணிப்பாளருக்கும் சம அளவான எரிபொருள் கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நிறுவனத்தின் பணிப்பாளருக்க மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக 170 லீற்றர் எரிபொருளிற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறு எனினும் இது தொடர்பாக மேலும் தெளிவுகள் பெற்றுக் கொள்வதற்கு 2013.11.06 ஆம் திகதிய கடிதம் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவிடம் விசாரிக்கப்பட்டது.

**ஒ. 2011. மார்ச் 07 ஆம் திகதி உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்தின் IRD / PAYEE / REG / 1 -2011 வரவு செலவு திட்ட ஆலோசனைக்கு ஏற்ப தேசிய வருமான சட்டத்திட்டத்தின் 07, 01 ஆம் வரி சுற்று நிருபங்கள்:**

கணக்காய்வு அறிக்கையில், உழைக்கும் போதான வரி கழிக்கப்படவில்லை என காட்டப்பட்டுள்ள படிவத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வவுச்சர் படிவங்களில் மூலம் வரிப்பணம் கழிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கிறேன்.

| வவுச்சர் இல | பெயர் | செலுத்திய தொகை | கழிக்கப்பட்ட வரி |
|---|---|---|---|
| 269 | எச்.எம்.வி.ஜி ஏரத் | 13,500.00 | 1350.00 |
| 289 | எச்.டப்ளியு சிறில் | 22,050.00 | 2205.00 |

கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகளுக்குரிய வெளிவாரி விரிவுரையாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சேவை வழங்குனர்களால் சேவையில் ஈடுப்படுத்தப்பட்ட ஊழியர்கள் அல்லர் என்பதால் (ஏற்கனவே பல்கலைகழக சேவையிலிருந்து ஓய்வு பெற்ற) உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்தின் 2011. மார்ச் 07 ஆம் திகதிய IRD / PAYE / REG / 1 -2011 ஆம் இலக்க வரவு செலவு திட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப வரி சுற்று நிருபம் 07 இன் பிரகாரம் உழைக்கும் போது செலுத்தும் வரிகளுக்கு உட்படமாட்டார்கள் என தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறே கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பேராசிரியர் (வெளிவாரி) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பேராசிரியர் திரு. மஹிந்த விஜேரத்ன க்கு சம்பளம் வழங்கும் போது தவறுதலாக உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். அவரின் எதிர்கால சம்பளங்களை செலுத்தும் போது அக்கால எல்லைக்குரிய உழைக்கும் போது செலுத்தும் வரித் தொகையை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.4 போதுமான அளவில் அதிகார மட்டத்தில் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்:-

அ. பல்கலைகழக ஊழியர்களுக்கு மொழித் தேர்ச்சி கொடுப்பனவுகள் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபனச் சுற்று நிருபம் இல. 1996 / 14, 1997 / 24 இன் படியும் பேராதனை பல்கலைகழகத்தின் தாபன பிரிவால் ஏற்புடையவாறு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களும் சம்பள ஏற்ற கடிதங்களையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளன என தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறே 2003 / 5 ஆம் இல பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின்படி 2003.01.01 ஆம் திகதியின் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இது தொடர்பான மேலதிக தெளிவுகளுக்காக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 8/2013 ஆம் இலக்க 2013.05.23 ஆம் திகதிய சுற்று நிருபத்தின்படி 2013. மே மாதத்திலிருந்து இக்கொடுப்பனவுகளை வழங்குவது முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது.

ஆ. விவசாய பட்டப்பின் கற்கை நிறுவனத்தின் கல்வி சார் பணிக் குழுவில் செயலாளர் பதவியில் கடமையாற்றும் விரிவுரையாளர், இந்நிறுவனத்தின் வெளிவாரி விரிவுரையாளர் ஒருவராக வழங்கும் சேவைக்கு மேலதிகமாக உரிய கல்வி சார் குழுவின் மாணவ பதிவுகள் முதல் பட்டம் வழங்குவது வரையான மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல். கல்விச் சார் பணிக் குழுவுக்கு விரிவுரையாளர் குழுவை நியமித்தல், கல்விப் பணிக் குழு கூட்டங்களில் பங்குபற்றுதல் போன்ற பணிகளை கருத்திலெடுத்து நிதி சபையினதும் 174/5/6 ஆம் இலக்க முகாமைத்துவ சபை கூட்டத்தின் சிபாரிசின்படியும் மாதம் ஒன்றிக்கு 1000 ரூபா வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆயினும் விவசாய பட்டப்பின் கற்கை நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப கல்வி சார் பணிக் குழு செயலாளரின் கொடுப்பனவாக முகாமைத்துவ சபை தீர்மானிக்கும் தொகை, பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட வேண்டுமென்பதால் அதற்கான கோரிக்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விடுக்கப்பட்டுள்ளது.

இ. 2013 ஆம் ஆண்டு விவசாய பட்டப்பின் கற்கை நிறுவனத்தின் வருடாந்த தொகை கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபட்ட பதவி நிலை அலுவலர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கும் போது, பொது அனுமதித்தல் நடைமுறையின்படி விடுமுறை தினக் கொடுப்பனவுகள் மாலை நேர சேவைக்காக பெற்றுக் கொடுக்க முடியாது என்பதால் அக்கணக்கெடுப்பு பணிகளில் ஈடுப்பட்ட அலுவலர்களுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் அப்பணிக்கு தேவைப்படும் காலத்தை கருத்திலெடுத்து மேலதிக நேர, விடுமுறை தின கொடுப்பனவுகளுக்கு சமமான கௌரவ கொடுப்பனவு (Honorarium allowance) ஒன்று செலுத்துவதற்கு 2013.11.29 ஆம் திகதி நடைபெற்ற 203 ஆம் முகாமைத்துவச் சபையின் அனுமதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 03. நிதிப் பெறுபேறுகள்:

நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்து கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பெறுபேறுகளுடன் இணங்குகிறேன். மீளாய்வுக்குட்பட்ட வருடத்திற்கு முன்னருள்ள வருடங்களுக்கு உரியவாறு திரண்ட நிதியத்திற்கான ஒத்திசைவுகள் தொடர்பாக உரிய ஜேர்னல் குறிப்புகள் மூலம் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளன.

## 04. நடவடிக்கைகள் மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

Crossing boundaries ஆராய்ச்சி கருத்திட்டத்தில் 2013.12.31 ஆம் திகதிக்கு மீதமாகவுள்ள நிழுவையான ரூபா 111,677.00 தொகை 2014. செம்டம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற 27 ஆம் நிதிச் சபையினதும் 2014. நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற 2010 ஆம் முகாமைத்துவ சபையினதும் அனுமதி பிரகாரம் நிறுவனத்தின் ஆய்வுப் பணிகளுக்கான வசதிகளை வழங்கும் நிதியத்திற்கு (Research facilitation fund) மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 4.2 நிதியங்களின் குறை பயன்பாடு

அ. 2014.03.19 ஆம் திகதி இடம்பெற்ற 25 ஆம் நிதிச் சபை சிபாரிசுகளின்படி 2013.12.31 ஆம் திகதிக்கு ஆராய்ச்சி நிதியங்களின் கணக்குகளில் காணப்பட்ட நிழுவையாகிய 1,214,716.00 ஐ அந்நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்புவதற்கு அல்லது நிறுவனத்தின் ஆராய்ச்சி நிதியத்துடன் சேர்ப்பதற்கு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி நிறுவனத்தில் 2014.09.26 ஆம் திகதி நடைபெற்ற 27 ஆம் நிதிச் சபையின் சிபாரிசுகளின் படியும் 2014. நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற 2010 ஆம் முகாமைத்துவ சபையின் அனுமதி பிரகாரமும் அந்நிழுவைகள் நிறுவனத்தின் ஆராய்ச்சிகளுக்கான வசதிகளை செய்து கொடுக்கும் நிதியத்திற்கு (Research facilitation fund) மாற்றப்பட்டுள்ளது.

ஆ. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விஞ்ஞான மையத்தினால் கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதியத்திலிருந்து 2013.12.31 ஆம் திகதிக்கு மிகுதியானவுள்ள நிழுவையாக குறிப்பிட்டிருந்த ரூபா 914,982.00 நிழுவை ரூபா 845,982.00 ஆக திருத்தப்பட வேண்டும். அவ்வாறே மீளாய்வுக்குட்பட்ட வருடத்தினுள் நிதி முன்னேற்றம் குறைவடைவதற்கு பிரதான காரணம் இக்கருத்திட்டத்திற்கு தேவையான உபகரணங்களை தயாரிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் பல்கலைகழகத்தில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கோரப்பட்டாலும் அவ் உபகரணங்களை இணைப்பதற்கு தேவையான பொருட்கள் அவ்வழங்குனர்களிடம் இருக்க வில்லை என்பதனால் ஆகும். எவ்வாறெனிலும் தொழிநுட்ப சபையின் சிபாரிசுகளின்படி ஏனைய வழங்குனர்களிடமிருந்து விலை கோரல்கள் பெறப்பட்டு தேவையான இணைப்புப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 2014.07.07 ஆம்

திகதிக்கு இக்கருத்திட்ட நிதியத்தின் நிழுவை ரூபா 292,294.00 என தெரிவிக்கிறேன்.

## 4.3 செயலற்ற குறை பயன்பாட்டு சொத்துக்கள்

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 180 பாடநெறி கைநூல்கள் விற்பனை செய்யப்படாத தொகையாக 2014.01.13 ஆம் திகதிய தொகை கணக்கெடுப்பு சபை அறிக்கையின் மூலமே இணங்காணப்பட்டது. உரிய பாடநெறி கைநூல்களும் உள்ளடங்கலாக இணங்காணப்பட்டுள்ள மற்றைய பயன்படுத்தப்படாத பொருட்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.4 உரிய வகையில் எடுத்துக் கொள்ளப்படாத காணிகள்

1979 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க விவசாய பட்டப்பின் கற்கை நிறுவனத்தின் சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப இந்நிறுவனம் பேராதனை பல்கலைகழகத்துடன் இணைந்த நிறுவனம் ஒன்றாக ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாறே இந்நிறுவனத்தின் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது அதற்கான அனுமதி பல்கலைகழகத்தின் காணிகள் கட்டிடங்கள் பராமரிப்பு சபையால் (LBMC) பெற்றுக் கொள்ளப்பட்டது. எவ்வாறெனினும் இதற்கு முன்னர் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டவாறு இதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி நிறுவனத்தின் பணிப்பாளரால் பல்கலைகழக பதிவாளரிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறே பொதுச் செயற்குழுவின் சிபாரிசுகளின்படி காணிகளின் உரித்து பல்கலைகழகத்திற்கே காணப்படும் என இறுதி கணக்கீடுகள் தொடர்பான கணக்கீட்டு கொள்கைகள் இலக்கம் 3.2 இல் கூறப்பட்டுள்ளது.

## 4.5 பணிக்குழுவின் நிர்வாகம்

அ. கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்படுள்ளவாறு ஏற்கனவே மனிதவள வரவு செலவு ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதன் பிரதி ஒன்றை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. திரு. எ.ஆர்.எ மெத்தேகம – ஒருங்கிணைப்பு அலுவலர் (ஒப்பந்த அடிப்படையில்) செல்வி கெ.பி. குணசேகர – விரிவுரையாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

**திரு. எ.ஆர்.எ மெத்தேகம – ஒருங்கிணைப்பு அலுவலர் (ஒப்பந்த அடிப்படையில்)**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்ட பதவியணிக்கான நிதி ஏற்பாடுகளில் உள்ளடங்கும் பதவி ஒன்றான ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான ஆட்சேர்த்துக் கொள்ளல் நடைமுறைக்கு பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி திரந்த விண்ணப்பம் கோரல் மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றிக்கு உட்படுத்தப்பட்டு அதன் சிபாரிசுகள் முகாமைத்துவ சபைக்கு அனுப்பப்பட்டு அதன் சிபாரிசுகளும் நிர்வாக சபையின் அனுமதிக்கும் ஏற்ப திரு. எ.ஆர்.எ மெத்தேகம ஐ 2012.05.13 ஆம் திகதி முதல் மேற்கூறிய பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அவ் ஒப்பந்த காலத்தை ஒரு வருடத்தினால் நீடிப்பதற்கும் 2013.05.31 ஆம் திகதி நடைபெற்ற 200 ஆம் முகாமைத்துவ சபையின் சிபாரிசுகளும் 2013.06.29 ஆம் திகதிய நிர்வாக சபையின் அனுமதியின் பிரகாரம் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

**செல்வி கெ.பி குணசேகர, ஆய்வு கட்டுரையாளர் (ஒப்பந்த அடிப்படையில்)**

முகாமைத்துவ சேவை சபையின் அனுமதி பெறப்பட்ட பதவியணிக்கான நிதி ஒதுக்குகளுக்குரிய பதவியொன்றான சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி ஆய்வுக் கட்டுரையாளர் பதவிக்கு தகைமையுள்ள ஒருவரை சேர்த்துக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட திறந்த விண்ணப்பம் கோரல் மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டு அதன் சிபாரிசுகள் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் சிபாரிசுகளும் நிர்வாக சபையின் அனுமதியும் பிரகாரம் செல்வி கெ.பி குணசேகரவை மேற்கூறிய பதவிக்கு 2012.05.13 ஆம் திகதி முதல் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. கெ. வீரசூரிய, சாரதி (கடமை சாட்டல் அடிப்படையில்)**

நிருவனத்தால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட வேன் (Van) உட்பட ஓடக்கூடிய நிலையில் 4 வாகனங்கள் காணப்பட்டாலும் அவற்றுக்கு 2 சாரதிகள் பதவிகளே அனுமதிக்கப்பட்டிருந்ததால் புதிதாக பதவி ஒன்றை உருவாக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்று விடுக்கப்பட்டிருந்தது. இப்பதவிகளின் ஏற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்படும் வரை பணிச் சாட்டல் அடிப்படையில் சாரதி ஒருவரை சேர்த்துக் கொள்வதற்கு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் சிபாரிசுகளின்படி

உயர் கல்வி அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திரு. கெ வீரசூரிய அவர்கள் பணிச் சாற்றல் அடிப்படையில் 2012.09.16 ஆம் திகதி முதல் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவ்வாறே இப்பதவிக்கு தேவையான பதவியணி நிதி ஏற்பாடுகளுக்காக (Cadre) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதோடு இப்பதவியின் வெற்றிடத்தை நிரந்தரமாக நிரப்பும் பணிகளை செய்யும் வரை 2013.01.04 ஆம் திகதி முதல் உரிய ஆட்சேர்த்துக் கொள்ளல்கள் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினதும் பல்கலைகழகத்தின் நிறுவாக சபையினதும் அனுமதி பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது.

## 5. கணக்கீட்டு பணிகளும் நல்லாட்சியும்

### 5.1 திட்ட சாராம்சம்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான திட்ட சாராம்சம் வருட ஆரம்பத்திலே தயாரிக்கப்பட்டது. ஆயினும் உயர் கல்வி அமைச்சால் பல்கலைகழக அமைப்புக்கு குறிப்பான வகையில் திட்ட சாராம்சம் தயாரிக்கப்படுவது தொடர்பாக அடிக்கடி செயலமர்வுகள் நடாத்தப்பட்டு பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதால் இந்நிறுவனத்தின் இறுதி திட்ட சாராம்சம் 2013 ஆம் ஆண்டில் ஜுலை மாதத்தில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபை கூட்டத்திற்கு அனுமதி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி தயாரிக்கப்பட்ட இறுதி திட்ட சாராம்சத்தை உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 5.2 செயற்றிட்டம் (Action plan)

செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இலக்குகள், அவைகளை அடைந்து கொள்ளல், பயன்படுத்தும் உபாயங்கள் தொடர்பாக அடிக்கடி நடைபெற்ற முகாமைத்துவ சபை கூட்டங்களில் ஆண்டு முழுதும் கலந்துரையாடப்பட்டது. அவ்வாறு கலந்துரையாடப்பட்ட விடயங்களில் மாணவர்களுக்கு வழங்குவதற்கு தயாராகவிருந்த மாணவ கைநூல்களை கொள்வனவு செய்தல், வெளிநாட்டு மாணவர்களை சேர்த்துக் கொள்ளல், புதிய பாடநெறிகளை நடாத்துதல், நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், புதிய பரீட்சை நடைமுறைகளை அறிமுகம் செய்தல், நிறுவனத்தின் நூலகத்தை அபிவிருத்தி செய்தல், மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை சமூகமயப்படுத்துவதற்கு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் என்பன தொடர்பாக இக்கூட்டங்களில் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டு அவை தொடர்பாக எடுக்கப்பட்ட

தீர்மானங்கள் செயற்படுத்தப்பட்டன. இக்குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு செயற்றிட்டத்தின் விடயங்களையும் உள்ளடக்கி கலந்துரையாடப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட சிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டன. அவ்வாறு செயற்படுத்தப்பட்டவைகளின் சுருக்க விபரம் ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

1. நிறுவனத்தின் பாடநெறிகளுக்கேற்ப நெறிப்படுத்தப்பட்ட மாணவ கைநூல் 2012-2015 ஆண்டு வரை தயாரிக்கப்பட்டமை.
2. ஆராய்ச்சி பட்டங்கள் தொடர்பான புதிய பரீட்சை குழுக்களை நியமித்ததன் ஊடாக பட்டப்பின் கல்வி பாடநெறிகளின் தரத்தை உயர் நிலைக்கு கொண்டு வருதல்.
3. ஆராய்ச்சி பட்டங்களை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் முழுமையாக திருத்தியமைக்கப்பட்டு புதிய மதிப்பீட்டு முறையொன்றை தயாரித்தல்.
4. நிறுவனத்தின் நிதி நிலைமையினை உறுதியாக பேணுவதற்கு புதிய பாடநெறி கட்டணம் முறையொன்றை தயாரித்தல்.
5. பாடநெறி கட்டணங்களை அறிவிடுதல் தொடர்பான நடைமுறையை வழுவூட்டுதல் மூலம் உயர் வருமானத்தை பெற்றுக் கொள்ளல்.
6. நிறுவனத்தின் பௌதிக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் - பழைய கட்டிடத்தை பழுது பார்த்தல்.
7. வகுப்பறைகள் / விரிவுரை மண்டபங்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்துதல்.
8. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே பரஸ்பர உறவினை கட்டியெழுப்புதல்.

இவ்விடயங்கள் தொடர்பான மேற்கூறிய குழுக்கள் கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு முழுவதுமாக செயற்படுத்தப்பட்டன.

அதன்படி நிறுவனத்தின் பல்வேறு பணிகள் செயற்றிட்டத்தின்படி முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு அவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பான குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஒன்று மீளாய்வு வருடத்தில் பெறப்பட்டது. அவ்வாறே எதிர்கால குழுக் கூட்டங்களில் செயற்றிட்டத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் செயற்படுத்தல் தொடர்பாக மேலும் கலந்துரையாடி அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5.3 உள்ளக கணக்காய்வு

அ. பேராதனை பல்கலைகழகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவால் பல்கலைகழகத்தின் விவசாய பட்டப்பின் கற்கை நிறுவனத்தினதும் விஞ்ஞான பட்டப்பின் கற்கை நிறுவனத்தினதும் உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதோடு சகல வருடங்களிலும் மேற்கூறிய 3 நிறுவனங்களுக்காகவும் தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை கணக்காய்வு சபைக்கு சமர்ப்பித்து அதன்

சிபாரிசுகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் உபவேந்தர் / நிறுவனப் பணிப்பாளரின் அனுமதியுடன் உள்ளக கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆ. 2013 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள் குறிப்பிடப்பட்ட காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 5.4 வரவு செலவுத் திட்ட அறிக்கையின் ஆவண நிர்வாகம்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதன் பின்னர் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களின்படி சம்பளங்களும் படிகளும், பரீட்சைக் கட்டணங்கள், வினாத்தாள் திருத்தும் பணிக்கான கட்டணங்கள் ஆகிய செலவுத் தலைப்புகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே வருடத்தில் பாடநெறி கட்டங்களும் ஏனைய கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக அதற்குரிய செலவுத் தலைப்புகளில் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட அதிகரிப்பொன்று காணப்படுகிறது. எவ்வாறெனினும் அடுத்து வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை தயாரிக்கும் போது இது பற்றி விசேட கவனம் செலுத்தி வித்தியாசங்களை குறைத்துக் கொள்ளக்கூடியவாறு நடைமுறை சாத்தியமான வகையில் வரவு செலவுத் திட்ட அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

## 6. ஒழுங்குகளும் நிர்வாகமும்

குறித்துக் கொண்டேன். கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்ட பிரிவுகள் தொடர்பாக மேலும் விசேட கவனம் செலுத்துமாறு உரிய அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.
உங்களது கணக்காய்வு அறிக்கைக்காக மேற்கூறப்பட்ட சகல தெளிவுப்படுத்தல்களும் சரியானவை என நான் தனிப்பட்ட ரீதியில் உறுதி செய்கிறேன்.

பேராசிரியர் : எஸ் சமித
பணிப்பாளர்
விவசாய பட்டப்பின் கற்கைகள் நிறுவனம்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்ச ஷ
3. தலைவர், பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு
4. உபவேந்தர், பேராதகை பல்கலைகழகம்